Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, DECEMBER 10, 2021

வெள்ளிக்கிழமை, 10 டிசெம்பர் 2021 | ஒளி: 07 கதிர்: 175 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

கர்ப்பிணித் தாய்மாருக்கும் பூஸ்டர் தடுப்பூசி

கொரோனாவுக்கு எதிரான பூஸ்டர் தடுப்பூசியை கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்க சுகாதார அமைச்சின் தடுப்பூசி வழிகாட்டல் குழு மற்றும் மகப்பேற்றியல் வைத்திய நிபுணர்கள் நிறுவகம் ஆகியவை அனுமதி வழங்கியுள்ளதாக அந்நிறுவனத்தின் தலைவர் டொக்டர் பிரதீப் டி சில்வா தெரிவித்தார். அதன்படி, 6 மாதங்களுக்கு மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி போட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த வைத்தியர்,

தொடர்ச்சி P2

கொவிட் தடுப்பு மையம் பசுமை மையமாக மாறும்

கொவிட் நடவடிக்கைகள் தொடர்பான செயற்பாடுகளை கொவிட் பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையம், நிறுத்துவதாக இலங்கை இராணுவம், நேற்று (09) அறிவித்தது.

இந்த மையம் பசுமை விவசாயத்துக்கான தேசிய செயற்பாட்டு மையமாக மாற்றப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16ஆம் திகதியன்று பதவியேற்று ஏறக்குறைய 1 வருடம் ஒன்பது மாதங்கள் நிறைவடைந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

தொடர்ச்சி P2

வீரசேகரவும் கரன்னாகொடவுமே

கொலைகளை செய்தனர்

பொன்சேகா தெரிவிப்பு: தங்கமும் தோண்டுகின்றனர் என்றார்

- ஒரு பாதாள கோஷ்டியைப் பாதுகாக்க மற்றொரு கோஷ்டியை கொலை செய்கிறார் வீரசேகர
- ஐஸ் போதைப்பொருள் கடத்தும் லெடியாவுடன் வீரசேகரவுக்கு என்ன தொடர்பு?
- சரத் வீரசேகரவைபோல வர்த்தகர்களிடம் பணம் பெறுபவன் நானல்ல

■ பா.நிரோஸ்

பொலிஸாரால் கைது செய்யப்படுவோர் கொலை செய்யப்படுவதை நியாயப்படுத்தி வரும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, அந்தக் கொலைகளுக்கு ஒருநாள் பதிலளிக்க வேண்டிய நிலைவரும். அன்று நாம் பார்த்துகொள்கிறோம் என்று தெரிவித்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம்.பி, அதிகாரத்தைப் பயன்படுத்தி சரத் வீரசேகர, வசந்த கரன்னாகொட ஆகியோரே கொலைகளைச் செய்தனர் எனவும் தெரிவித்தார். வரவு- செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் நேற்று (09) கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

தொடர்ச்சி P2

வடமேல் மாகாணத்துக்கு

புதிய ஆளுநராக கரன்னாகொட நியமனம்

வடமேல் மாகாணத்தின் புதிய ஆளுநராக முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரால் ஒப் டி பீல்ட் வசந்த கரன்னாகொட, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நேற்று (09) நியமிக்கப்பட்டுள்ளார்

உள்நாட்டுப் போரின் போது இலங்கை கடற்படைத் தளபதியாக கடமையாற்றிய கரன்னாகொட, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் போக்குவரத்து அமைச்சின் செயலாளராக பணியாற்றினார்.

தொடர்ச்சி P2

குளங்களை பிடித்தோரை வெளியேறுமாறு தீர்ப்பு

■ க. அகரன்

வவுனியா, பண்டாரிக்குளத்தின் அலைகரை பகுதியை அத்துமீறி பிடித்த ஆறு பேரையும், உடனடியாக அவ்விடத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று, வவுனியா நீதிமன்று தீர்ப்பு வழங்கியுள்ளதாக, வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் எஸ்.விஸ்னுதாசன் தெரிவித்தார். வவுனியாவில், நேற்று (09) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இதனை தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

எரிவாயு விவகாரம்

லிட்ரோ நிறுவனத்தில் எதிர்க்கட்சி ஆய்வு

எரிவாயு சிலிண்டர்களுடன் தொடர்புடைய வெடிப்புச் சம்பவங்கள் மற்றும் அவற்றின் கலவை தொடர்பான நிலைமைகளை ஆராய்வதற்காக, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று, லிட்ரோ நிறுவனத்துக்கு, நேற்று (09) விஜயம் மேற்கொண்டது.

அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜே. சி. அலவத்துவல, முஜிபூர் ரகுமான், ஹெக்டர் அப்புஹாமி, எஸ். வேலுகுமார் உள்ளிட்டோர், லிட்ரோ நிறுவனத்துக்கு விஜயம் செய்திருந்தனர்.

தொடர்ச்சி P2

சிலிண்டர் லேபலில் மோசடி; வெள்ளை லேபல் சிவப்பானது

■ ரஞ்சித் ராஜபக்ஷ

பொகவந்தலாவை பிரதேசத்தில் பெண்ணொருவரால் நேற்று (9) காலை கொள்வனவு செய்யப்பட்ட சிவப்பு லேபலுடனான லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரில், வெள்ளை லேபலுக்கு மேலாக சிவப்பு லேபல் ஒட்டப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. நுகர்வோரை தவறாக வழிநடத்துவதற்காக இந்த லேபல் மோசடி இடம்பெற்றுள்ளதாக அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

அலி சப்ரி பதவி விலகக்கூடாது

■ பா.நிரோஸ்



நீதி அமைச்சர் அலி சப்ரி, நீதி அமைச்சுப் பதவியிலிருந்து விலகக்கூடாதென ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (09) நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், பாகிஸ்தான் படுகொலை செய்யப்பட்ட பிரியங்க குமாரவின் படுகொலைக்கு கண்டனத்தைத் தெரிவித்த ஹக்கீம், பாகிஸ்தான் பிரதமர் இந்த விடயத்தில் நேரடியாக செயற்பட்டுள்ளார் எனவும் கூறினார். நீதி அமைச்சர் அலி சப்ரியை பதவி விலகக்கூறி அச்சுறுத்தி வருவதாகவும், ஆனால் அவர் பதவி விலகவில்லை என சுமந்திரன் கூறியுள்ளார். அமைச்சுப் பதவியை துறப்பதை விட அப்பதவியிலிருந்துகொண்டு அலி சப்ரி போராட வேண்டும் எனவும் கூறினார்.

தொடர்ச்சி P2

அலி சப்ரி

பதவியைத் துறக்க வேண்டும்

■ பா.நிரோஸ்

நீதி அமைச்சர் அலி சப்ரி அந்தப் பதவியில் உறுதியில்லாதவராக இருப்பதாகத் தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அரசாங்கத்திலிருந்து கொண்டு, அவரது சமூகத்துக்கு எதிராகச் செயற்பட முடியாது என்பதால், நீதி அமைச்சுப் பதவியை துறந்து வர வேண்டும் என தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், நீதி அமைச்சர் அலி சப்ரி அந்தப் பதவியில் உறுதியில்லாத நிலையிலேயே இருக்கிறார். நீதி அமைச்சர் பதவியில் இருந்து அவர் விலகப்போவதாக செய்திகள் வெளியாகியிருந்தன. அலி சப்ரி நினைத்தால் பதவியிலிருந்து விலக முடியும். ஆனால் அதனை எவ்வாறு செய்வதென்று அவருக்கு தெரியவில்லை என்றார்.

தொடர்ச்சி P2

எரிவாயுக்கு எதிரான மனுவை இன்று ஆராய்வதற்கு தீர்மானம்

எரிவாயுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை இன்று (10) ஆராய மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (9) தீர்மானித்தது. மேன்முறையீட்டு நீதியரசர்களான பிரியந்த பெர்ணான்டோ (தலைவர்), சம்பத் அபேகோன் ஆகியோரால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சரியான தர நிலைகள் இல்லாமல் எரிவாயு இறக்குமதி செய்யப்பட்டமையால் ஏற்படும் அபாயகரமான சம்பவங்கள் தொடர்பில், அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிவில் செயற்பாட்டாளர் நாகானந்த கொடிதுவக்குவால் தாக்கல் செய்யப்பட்ட இந்த ரிட் மனுவில், குற்றவியல் சட்டத்தின் கீழ் சட்டநடவடிக்கை எடுக்குமாறு, சட்டமா அதிபர் மற்றும் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடுமாறும் கோரப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

விவசாய அமைச்சர் எதற்கு?

இராணுவத்தினரால் உரம் விநியோகிக்கப்படுகிறது என்றால் விவசாய அமைச்சர் எதற்கென கேள்வியெழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, உரம் விநியோகிக்கும் பணியை இராணுவத் தளபதியிடம் ஒப்படைத்தால் இந்த நாட்டில் விவசாய அமைச்சரோ, உர அமைச்சரோ எதற்காக என்றார்.

தொடர்ச்சி P2

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்:

ஆயத்தங்களை மேற்கொள்கிறது ஆணைக்குழு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான (பிரதேச சபைகள், நகர சபைகள், மாநகர சபைகள்) ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா, தேர்தல் சட்ட மறுசீரமைப்பு தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் நேற்று (08) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

பரிசீலனைக்கு வருகிறது ரணிலின் ரிட் மனு

அரசியல் பழிவாங்கல் சம்பவங்கள் தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகளை செயற்படுத்துவதை இடைநிறுத்துமாறு கோரி, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தாக்கல் செய்த ரிட் மனு, ஜனவரி 28ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம், நேற்று (09) அறிவித்தது.

தொடர்ச்சி P2

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ்

கைதானோருக்கு விடுதலை

■ பா. நிரோஸ்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ சபைக்கு அறிவித்ததோடு, அதற்காகச் சில சட்ட முறைகளைப் பின்பற்ற வேண்டியிருக்கிறது. அதனை நீதி அமைச்சர் அலி சப்ரி செய்து வருகிறார் எனவும் கூறினார்.

வரவு- செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனின் உரையின்போது, குறுக்கிட்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், உங்களது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எங்களுக்கு ஒருபோதும் உதவியதில்லை; உதவப்போவதும் இல்லை. எனவே அரசியல் கைதிகளின் விடயத்தில் நாம் அரசியல்ரீதியான வாக்குறுதிகளை வழங்கப்போவதில்லை. இது தொடர்பில் நாம் முன்பும் எந்தவொரு வாக்குறுதிகளையும் வழங்கவும் இல்லை என்றார்.

தொடர்ச்சி P2

ஐந்து கோரிக்கைகளை வலியுறுத்தி

பெண்கள் அமைப்பு கவனயீர்ப்பு பேரணி

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குமாறும் வலியுறுத்தல்

■ வா.கிருஸ்ணா

ஐந்து கோரிக்கைகளை வலியுறுத்தி, கிழக்கு மாகாண பெண்களால் ஒன்றிணைக்கப்பட்ட அனர்த்த முகாமைத்துவ பெண்கள் கூட்டமைப்பின் ஏற்பாட்டில், கவனயீர்ப்புப் பேரணி, நேற்று (09) காலை முன்னெடுக்கப்பட்டது. மட்டக்களப்பு - கல்லடி பாலத்திலிருந்து பறை, மேளம் ஓசையுடன் ஆரம்பமான இப்பேரணி,

தொடர்ச்சி P2

குறிஞ்சாக்கேணி படகுப்பாதை விபத்து:

நகர சபை தலைவருக்கு இன்று வரை விளக்கமறியல்

■ எப்.முபாரக், கீத்

கிண்ணியா, குறிஞ்சாக்கேணி படகுப்பாதை கவிழ்ந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட கிண்ணியா நகர சபைத் தலைவர் எஸ். எச்.எம். நளீமுக்கு இன்று (10) வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு, திருகோணமலை நீதிமன்ற நீதவான் பயாஸ் ரசாக் முன்னிலையில் நேற்று (09) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, இவ்வுத்தரவை நீதவான் வழங்கினார்.

தனது கட்சிக்காரர் சுகவீனம் காரணமாக சிகிச்சை பெற்று வருவதாகவும் இதனை கருத்திற்கொண்டு அவருக்குப் பிணை வழங்குமாறும், கிண்ணியா நகர சபைத் தலைவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றில் கோரிக்கை விடுத்திருந்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

கொலைகளைச் செய்தனர்

பொலிஸாரால் கைது செய்யப்படுபவர்கள் கொலை செய்யப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்கு எதிராக நான் பேசும்போது, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், போதைப்பொருள் வர்த்தகர்களுடன் எனக்கு தொடர்பிருப்பதாகக் காண்பிக்க முயற்சித்தார் என்று குறிப்பிட்டார்.

சரத் வீரசேகரவைபோல வர்த்தகர்களிடம் பணத்தைப் பெற்று அவர்களுக்கு ஆதரவாகச் செயற்படுபவன் நானல்ல. இதேவேளை, சபைக்குப் படம் ஒன்றை சமர்ப்பித்த சரத் பொன்சேகா, ''இந்த படத்தில் சரத் வீரசேகரவுடன் இருப்பவர் லெடியா. லெடியாவே இலங்கைக்குப் ஐஸ் போதைப்பொருளை கடத்துகிறார். லெடியாவின் சகோதரும், அவரது நண்பரும் படத்தில் இருக்கிறார்கள் என்றார். ஒரு பாதாள உலகக் கோஷ்டியினருடன் இணைந்து அவர்களைப் பாதுகாக்க மற்றொரு பாதாள உலகக் கோஷ்டியினரை கொலை செய்யும் வேலைகளிலேயே வீரசேகர ஈடுபடுவதாகவும் பொன்சேகா குற்றம் சுமத்தினார்.

இதேவேளை, சரத் வீரசேகரவின் செயலாளர் திருட்டுத்தனமாக தங்கங்களை தோண்ட சென்றுள்ளதோடு, இடங்களை கொள்ளையிடும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகிறார் எனவும் குற்றம்சுமத்தினார்.

கொவிட் தடுப்பு மையம் பசுமை மையமாக மாறும்

கொவிட் பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா, நேற்று மதியம் (08) செயற்பாட்டு மையத்தின் கடைசிக் கூட்டத்தை நடத்தினார்.

இந்த கூட்டத்தில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன உட்பட அதன் உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.

கடைசிக் கூட்டத்தில் உரையாற்றி இராணுவத் தளபதி தெரிவித்ததாவது,

இலங்கை ஜனாதிபதி மற்றும் இலங்கை அரசாங்கத்தின் தலைமையிலான ஒரு குழுவின் உறுப்பினர்களாக நாங்கள் ஒன்றிணைந்து, நமது நாட்டில் உலகளாவிய தொற்றுநோயைக் கட்டுப்படுத்த சுமார் 2 ஆண்டுகளாக அயராது உழைத்து வருகிறோம்.

இந்த காலகட்டத்தில் நாங்கள் மூன்று முக்கிய கொத்தணிகள் அல்லது அலைகளை அனுபவித்தோம், மேலும் இந்த பெரிய நாட்டின் குடிமக்களை கண்ணுக்கு தெரியாத அச்சுறுத்தலில் இருந்து பாதுகாப்பதற்கான மகத்தான சவால்களுடன் குழுப்பணி ஒப்படைக்கப்பட்டது.

இந்த தொற்றுநோயைக் கட்டுப்படுத்த உத்திகளை வகுக்கவும், பல்வேறு திட்டங்களையும் நடைமுறைகளையும் செயற்படுத்த, முக்கிய குழு, நிபுணர் குழு மற்றும் பல்வேறு பணிக்குழுக்களாக நாங்கள் ஒன்றாகச் செயற்பட்டோம் கூறினார்.

சிலிண்டர் லேபலில் மோசடி...

பொகவந்தலாவை பிரதேசத்திலுள்ள லிட்ரோ சமையல் எரிவாயு முகவர் விற்பனை நிலையத்துக்கு புதிய லேபலுடன் நேற்று (9) காலை குறித்த நிறுவனத்தால் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையிலேயே அப்பெண் கொள்வனவு செய்த சமையல் எரிவாயு சிலிண்டரில் லேபல் மோசடி இடம்பெற்றுள்ளது. எனினும், லேபல் கழற்றப்பட்டுள்ளதால், அந்த சிலிண்டரை விற்பனை நிலையத்தில் மீளவும் கையளிக்க முடியவில்லை. இதனையடுத்து. அச்சிலிண்டரையே அப்பெண், அச்சத்துடன் பயன்படுத்தி வருகின்றார்.

குளங்களைப் பிடித்தோரை...

இது குறித்து தொடர்ந்துரைத்த அவர், வவுனியா மாவட்டத்தில் குளங்களுக்குச் சொந்தமான காணிகளை அடாத்தாபிடித்தல் மற்றும் வயற்காணிகளை அடாத்தாகப்பிடித்து, மண் நிரவி, வீடுகள் அமைக்கும் செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்று வந்துள்ளது என்றார். இது தொடர்பாக வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளரால், 2020ஆம் ஆண்டளவில், வவுனியா - பண்டாரிக்குளத்தின் அலைகரை பகுதியில், குளத்துக்கு சொந்தமான காணியினை அத்துமீறி பிடித்தமை தொடர்பாக 32 வழக்குகள் தொடர ப்பட்டன எனவும்,அவர் கூறினார். "இதனடி ப்படையில், அந்த வழக்குகளில், 6 வழக்குகளுக்கான தீர்ப்பு நீதிமன்றத்தால், புதன்கிழமை (8) வழங்கப்பட்டுள்ளது. அந்தவகையில், குறித்த 6 நபர்களும் அந்த இடத்தை விட்டு வெளியேறவேண்டும் என்று நீதிமன்றத்தால் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது" என்றார்.

லிட்ரோ நிறுவனத்தில்...

லிட்ரோ நிறுவனத்தை ஆய்வு செய்த பின்னர் முஜிபூர் ரகுமான் எம்.பி ஊடகங்களிடம் தெரிவித்ததாவது,

நிறுவனத்தின் பணிப்பாளருடன் கலந்துரையாடினோம். நுகர்வோர் விவகார அதிகார சபையினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்த அவர், சமீப நாட்களில் எரிவாயுக் கலவையில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் ஒப்புக்கொண்டார் என்று குறிப்பிட்டார். ஐக்கிய மக்கள் சக்தியினராகிய நாம், இது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை எடுப்போம் என்றும் இந்த எரிவாயு வெடிப்பினால் சேதம் அடைந்த மக்களுக்கும், சொத்துக்களுக்கும் இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். இந்த விவகாரத்தில் அரசாங்கம் உடனடியாக தலையிட்டு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அவர், இது தொடர்பில் தமது பாராளுமன்ற உறுப்பினர்கள், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திலும் நுகர்வோர் விவகார அதிகார சபைக்கும் முறைப்பாடு செய்துள்ளமையையும் சுட்டிக்காட்டினார்.

எரிவாயு சிலிண்டர்களின் கலவை மற்றும் தரம் தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் என்று கூறியுள்ளோம். முறையான விசாரணை நடத்தப்பட்டு, குற்றவியல் சட்டத்தின்படி தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் வரை நாங்கள் விழிப்புடன் இருப்போம் என்றார்.

நகர சபை தலைவருக்கு...

எனினும், இது தொடர்பான வழக்கை இன்று வரை ஒத்திவைத்த நீதவான், சந்தேகநபரின் விளக்கமறியலை இன்று (10) வரை நீடிப்பதாக உத்தரவிட்டார். இதேவேளை, குறித்த அனர்த்தம் தொடர்பில் படகின் உரிமையாளர் மற்றும் அதனை இயக்கிய இருவர் ஆகிய மூன்று சந்தேக நபர்களுக்கும் எதிர்வரும் டிசெம்பர் 16ஆம் திகதி வரை விளக்கமறியலை நீடிக்கும் உத்தரவு, நேற்று முன்தினம் (08) வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கர்ப்பிணித் தாய்மாருக்கும்...

இதுவரை, 60 கர்ப்பிணித் தாய்மார்கள் கொரோனா நோய்த்தொற்றால் மரணித்துள்ளனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசி வழங்கப்பட்டதில் இருந்து, கொரோனா காரணமாக மரணங்கள் மற்றும் நோயுற்றவர்களின் எண்ணிக்கையில் கணிசமான குறைவு ஏற்பட்டுள்ளது என்றும் கூறினார்.

கொரோனா தொற்றுக்குள்ளான கர்ப்பிணித் தாய்மார்கள், வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்ற போதும் அவர்களில் யாரும் ஆபத்தான நிலையில் இல்லை என்றும் இது தடுப்பூசி திட்டத்தின் விளைவாகும் என்றும் குறிப்பிட்டார். எனவே, அவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசியை வெற்றிகரமாக வழங்க வேண்டும் எனவும் இது கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஏற்படும் நோய் அபாயத்தைக் குறைக்கும் எனவும் தெரிவித்தார்.

புதிய ஆளுநராக கரன்னாகொட நியமனம்

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருந்த வடமேல் மாகாண சபையின் ஆளுநர் ராஜா கொலுரே மரணமடைந்ததை அடுத்த ஏற்பட்ட வெற்றிடத்துக்கே, வசந்த கரன்னாகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் தமிழ் இளைஞர்கள் 11 பேரை கடத்தியமை, சித்திரவதை செய்தமை, கப்பம் பெற்றமை மற்றும் கொலை செய்ய சதி செய்தமை தொடர்பாக அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருந்து வசந்த கரன்னாகொட இந்த ஆண்டு விடுவிக்கப்பட்டார்.

2021 ஒக்டோபர் மாதம், வசந்த கரன்னாகொடவுக்கு எதிராக கொழும்பு விசேட மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அதிகுற்றச்சாட்டுப் பத்திரத்தை மீளப்பெற்றுள்ளதாக சட்டமா அதிபர், மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எரிவாயுக்கு எதிரான மனுவை இன்று ஆராய்வதற்கு தீர்மானம்

பாதுகாப்பற்ற சமையல் எரிவாயு சிலிண்டர்களால் ஏற்பட்ட வெடிப்புகளால் பாதிக்கப்பட்டவர்களுக்க நட்டஈடு செலுத்துமாறு லிட்ரோ மற்றும் லாப் நிறுவனங்களுக்கு உத்தர விடுமாறும் அந்த மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த சமையல் எரிவாயு பிரச்சினை குறித்து அரச நிறுவனங்களின் கவனயீனம் தொடர்பில் விசாரணை செய்யுமாறு தெரிவித்து, இலங்கை இளம் ஊடகவியலாளர் சங்கம் உள்ளிட்ட சமூகசெயற்பாட்டு குழுக்களின் முறைப்பாடுகளுக்கு அமைய, இலங்கை தர நிர்ணய சபை, நுகர்வோர் அதிகார சபை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு என்பன மனித உரிமைகள் ஆணைக்குழுவை நேற்று (9) சந்தித்திருந்தன.

அனி சப்ரி பதவி...

சட்டத்தின் சில பிரிவுகள் சிறுபான்மை மக்களை இலக்கு வைத்து செயற்படுவதாகவும், குறிப்பாக ஐ.சி.பி.ஆர், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஆகியன சிறுபான்மை மக்களில் சிலரை பழிவாங்கப் பயன்படுத்தப்படுகிறது எனவும் கூறினார்.

விவசாய அமைச்சர்...

புத்தல பிரதேசத்தில் நேற்று (9) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உரத்தை விநியோகிக்க முடியாத அரசாங்கம் அதனை இராணுவத் தளபதியிடம் ஒப்படைத்துள்ளது. ஆனால் நாட்டில் வரி செலுத்தும் மக்கள் பணத்தில் அமைச்சர்கள் செயற்படுவது பாரிய குற்றமென தெரிவித்த அவர், தமது விவசாய அமைச்சர், உர அமைச்சர் மற்றும் சகல அதிகாரிகளினதும் தோல்வியின் சமிக்ஞையையே ஜனாதிபதி இங்கு வெளிப்படுத்தியுள்ளார் என்றார்.

அரச ஊழியர்கள் மீது அரசாங்கத்திற்கு நம்பிக்கை இல்லையென்றாலும் தமக்கு முழு நம்பிக்கை இருப்பதாக தெரிவித்த அவர், சிறந்த முறையிலான நிர்வாகத்துடன் அவர்களின் சேவையை நாடு பெற்றுக்கொள்ள வேண்டியதே தற்போது செய்யக் கூடிய ஒன்றாகும் என்றார்.

விவசாயத்தை ஆரம்பிக்க அரசாங்கம் மேற்கொள்ளும் இந்த பொறுப்பற்ற மற்றும் தன்னிச்சையான செயற்பாடுகளினால் நாட்டில் மிக விரைவில் பஞ்சம் ஏற்படுவதை தடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கைதானோருக்கு...

இந்நாட்டு பிரஜைகள் தொடர்பில் அரசாங்கம் என்கிற வகையில் எமக்குப் பொறுப்புகள் இருக்கின்றன. எனவே அதனை நாம் நிறைவேற்றுவோம் எனவும் கூறினார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்வது தொடர்பில் அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக நீதி அமைச்சர் அலி சப்ரி இதன்போது கூறியதோடு, அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கூறியதுபோல பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த 14 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றார்.

முன்னாள் நீதியரசர் அசோக் டி சில்வா தலைமையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தொடர்பில் ஆலோசனைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதனூடாக 46 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மேலும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளோரின் வழக்கு விசாரணைகளை நீதிச் சேவை ஆணைக்குழு ஊடாக தினந்தோறும் விசாரிக்கப்பட வேண்டும் எனவும் பிரதம நீதியரசர் உத்தரவிட்டுள்ளார் என சுட்டிக்காட்டினார்.

இதனால், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தால் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பான விவகாரத்தை அரசாங்கம் மிக உன்னிப்பாக அவதானித்து வருகிறது எனவும் கூறினார்.

பெண்கள் அமைப்பு கவனயீர்ப்பு பேரணி

மட்டக்களப்பு பிரதான பஸ் நிலையம் வரையில் வருகைதந்ததுடன், அங்கு தமது கோரிக்கைகளை வலியுறுத்தும் அரசாங்கத்துக்கான மகஜர் வாசிக்கப்பட்டது.

சிறுபான்மையினருக்கு எதிராகப் பிரயோகிக்கப்படும் ஆயுதமாகவுள்ள பயங்கரவாத தடைச்சட்டம் கட்டாயமாக நீக்கப்படுவதுடன், அச்சட்டம் பாவிக்கப்படுதல் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்றும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

பேரணியில் கலந்துகொண்டவர்கள் "வன்முறைகளற்ற வீடும் நாடும் எமக்கு வேண்டும்", "பெண்களுக்கு பாரபட்சமான சட்டத்தை திருத்த வேண்டும்", "நீதி கோரும் சகோதரிகளாக நாம் ஒன்றிணைவோம்" மற்றும் "வன்முறைகளற்ற ஒரு கௌரவமான சமூகத்தை உருவாக்க ஒன்றிணைவோம்" போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

"தற்கால நெருக்கடியான சமூக மற்றும் அரசியல் சூழல் காரணமாக பெண்கள், சிறுமிகள் உட்பட அனைவரும் பாரியளவில் சிரமப்படுகின்றனர். இலங்கையில் ஐந்துக்கு ஒரு பெண் என்ற வகையில் தினமும் உடல் ரீதியான, பாலியல் வன்முறைகளுக்குள்ளாகின்றனர் என தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் கூறியுள்ளது.

"அத்துடன், தற்போது பெண்களுக்கு பாரபட்சமாகவுள்ள சட்டங்களான பொதுத் திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டம் மற்றும் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் ஆகியன உடனடியாக திருத்தப்பட வேண்டும்.

"இது மட்டுமல்லாது, இந்த வருடம் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் எமது பிரதேசங்களில் இருக்கும் பலர் கைது செய்யப்பட்டும், தடுத்து வைக்கப்பட்டும் நீதியான விசாரணைகளின்றி சிறைகளில் வாடுகின்றார்கள். இதனால், ऽபெண்களாகிய நாம் மிகவும் சிரமப்படுகின்றோம். "சிறுபான்மையி னருக்கெதிராக பிரயோகிக்கப்படும் ஆயுதமாகவுள்ள இந்த பயங்கரவாத தடைச்சட்டம் கட்டாயமாக நீக்கப்படுவதுடன், இச்சட்டம் பாவிக்கப்படுதல் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்" போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாதொழிக்கும் 16 நாள் செயல்வாத வாரம், கடந்த நவம்பர் 25ஆம் திகதி தொடக்கம் இன்று 10ஆம் திகதி வரையில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆயத்தங்களை மேற்கொள்கிறது ஆணைக்குழு

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் அடுத்த வருடம் மார்ச் மாதம் 20ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், தேர்தல் சட்ட மறுசீரமைப்பு தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழு, பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் அதன் தலைவர் தினேஷ் குணவர்தன தலைமையில் நேற்று (08) கூடியது.

இதன்போது தினேஷ் குணவர்தன மற்றும் அதன் உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரிடம் வினவினார்கள்.

அதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா, தேர்தலுக்கு சுமார் நான்கு மாதங்களுக்கு முன்னதாக எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு தயாராக வேண்டியது அவசியமானது என தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைமுறையில் உள்ள சட்ட நிபந்தனைகளின் கீழ் நடத்தப்படுமாயின், தேர்தலுக்கான திகதிகளை அடுத்த வருடம் ஜனவரி மாதத்துக்குள் அறிவிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி மீண்டும் கூடவுள்ளதாக தெரிவுக்குழு தெரிவித்துள்ளது என்று தெரிவுக்குழுவின் செயலாளரும், பாராளுமன்றத்தின் பிரதிச் செயலாளர் நாயகமும், அதிகாரிகளின் பிரதானியுமான குஷானி ரோஹணதீர அறிவித்தார்.

பரிசீலனைக்கு வருகிறது ரணிலின் ரிட் மனு

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான நிஸங்க பந்துல கருணாரத்ன, தேவிகா அபேரத்ன மற்றும் டி.எம். சமரகோன் ஆகியோர் முன்னிலையில் நேற்றையதினம் (09) மனு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, ஜனவரி 28ஆம் திகதியன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன், அன்றைய தினத்துக்கு அமர்வு ஒத்திவைக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது மனுவில், மனுதாரர் தொடர்பாக 17-51 பக்கங்களில் உள்ள கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகளின் செயற்பாட்டை இடைநிறுத்த இடைக்கால உத்தரவை கோரியுள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஆணையாளர்களான ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி உபாலி அபேரத்ன, ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சந்திரசிறி ஜயதிலக மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, ஆணைக்குழுவின் செயலாளர் பேர்ல் வீரசிங்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் பி.பி. ஜயசுந்தர ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

2020 செப்டெம்பர் மாதம் 4ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினத்தில், ஜனாதிபதி ஆணைக்குழுவில் தான் சமுகமளித்திருந்ததாகவும் பிரதிவாதியாக தான் கருதப்படவில்லை என்றும், சாட்சியாக மாத்திரம் கருதப்பட்டிருந்ததாகவும் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டதாக மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

பதவியை துறக்க வேண்டும்

11 தமிழ் இளைஞர்கள் கடத்தி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் குற்றச்சாட்டப்பட்ட சந்தேகநபரான கடற்படையின் முன்னாள் தளபதி வசந்த கரன்னாகொட வடமேல் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட உள்ளதாக செய்திகள் வெளியாவதாகவும் கூறினார்.

நீதிமன்றம் குற்றவாளியாக அறிவித்த, இன்னொரு வழக்கில் சந்தேகநபராக உள்ள ஞானசார தேரரை ஜனாதிபதி செயலணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு நீதி அமைச்சர் எதிர்ப்பை தெரிவித்தும் ஒன்றும் நடக்கவில்லை என்றார். சுயமரியாதைய விரும்பும் எந்தவொரு தமிழரும் இந்த ஜனாதிபதி செலயணியில் இருக்க மாட்டார்கள் எனவும் தெரிவித்த சுமந்திரன், அதிகார பரவலாக்கலை வழங்குவதாக ஐ.நாவுக்கும் இந்தியாவுக்கும் ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ இருக்கும் போது வழங்கிய வாக்குறுதிகளையும் சுட்டிக்காட்டியதோடு, இவ்வாறான நிலையில் ஒரே நாடு, ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணி அநீதியானது எனவும் சாடினார்.

நீதி அமைச்சர் அலி சப்ரி இது தொடர்பில் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அரசாங்கத்திலிருந்துகொண்டு உங்கள் சமூகத்துக்கு எதிராக செயற்பட முடியாது. எனவே, நீதி அமைச்சுப் பதவியை துறந்து வர வேண்டும் எனவும் சுமந்திரன் எம்.பி இதன்போது கூறினார்.

சியோன் தேவாலய தாக்குதல்; 63 பேரின் விளக்கமறியலும்

22 வரை நீடிப்பு

■ வா.கிருஸ்ணா

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட சஹ்ரானின் சகோதரி உட்பட சியோன் தேவாலய தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் 63 பேரையும், எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம். றிஸ்வான் உத்தரவிட்டார்.

இது தொடர்பான வழக்கு விசாரணைகள், மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் காணொளி தொழில்நுட்பம் ஊடாக நேற்று (09) நடைபெற்றபோதே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. 21.4.2019 உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தின் பெயரிலும் காத்தான்குடியை சேர்ந்த 65 பேர் கைது செய்யப்பட்டனர்.

அதேவேளை, சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர் உட்பட 4 பேரை மட்டக்களப்பு பொலிஸார் கைது செய்தனர். இரு வெவ்வேறு வழக்குகளை கொண்ட 69 பேர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் 5 பேர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து 64 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் வெவ்வேறு இரு வழக்கு இலக்கங்களை கொண்ட 64 பேரும் பொலன்னறுவை, அநுராதபுரம், கேகாலை மற்றும் திருகோணமலை சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு, தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

திருவெம்பாவை நாளை ஆரம்பம்

■ வி.ரி.சகாதேவராஜா

இந்துக்கள் அனுஷ்ட்டிக்கும் சிவ விரதங்களுள் ஒன்றான திருவெம்பாவை விரதம், நாளை (11) அதிகாலை ஆரம்பமாகின்றது. இவ்விரதத்தை, "ஆருத்திரா தரிசனம்" என்றும் அழைப்பர். நாளை தொடக்கம் 10 நாள்கள் இவ்விரதம் அனுஷ்டிக்கப்படும். கோவில்களின் அதிகாலை திருவெம்பாவை சிறப்பு பூஜைகள் இடம்பெறும். இவ்விரதம் எதிர்வரும் 20ஆம் திகதி திருவாதிரை தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையும். அதிகாலையில் திருப்பள்ளியெழுச்சி பாடி அனைவரையும் துயிலெழுப்பி சிவபிரானுக்கு திருவெம்பாவை பாடுவது வழமை. அதேபோன்று, இந்துக்கள் வாழும் கிராமங்களில் பொதுவாக அதிகாலை திருப்பள்ளியெழுச்சி ஊர்வலம் நடைபெறுவதும் வழமையாகும். மேலும், சில கோவில்களில் திருவாசக முற்றோதல் இடம்பெறுவதும் வழக்கமாகும்.

விண்ணப்பம் கோரல்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் இதழியல் பிரிவினால் நடத்தப்படும் தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைகள் டிப்ளோமா பாடநெறிக்கான 2022 ஆம் கல்வியாண்டுக்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த டிப்ளோமா பாடநெறியானது தேசிய தொழில்சார் தகைமையின் மட்டம் 05க்கு (NVQ Level 05) சமனானது.

மேலும், இது இலங்கை தகைமைக் கட்டமைப்பின் (SLQF Level 03) மட்டம் 03க்கு மேம்படுத்தப்பட்டுள்ளது.

ஊடகச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்கள், எதிர்காலத்தில் ஊடகத்துறையில் இணைய விரும்புவர்கள் விண்ணப்பிக்கலாம், மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

தமிழ், சிங்கம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிமூலங்களில் நடத்தப்படும் மற்றும் விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்வின் மூலம் கற்கைநெறிக்கு தெரிவு செய்யப்படுவார்கள்.

தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைகளுக்கான டிப்ளோமா பாடநெறிக்கான விண்ணப்பங்களை கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் வெளியீட்டு பிரிவு மற்றும் பல்கலைக்கழக இணையளத்தளமான w cmb.ac.lk இலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும். மேலதிக விபரங்களுக்கு 0716843267 அல்லது 077327733 இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 2021 டிசெம்பர் 31ஆகும்.

UNV 50 AWARDS விருது

கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சுக்கு கிடைத்துள்ளது

ஐக்கிய நாடுகள் அமைப்பினால், உலகளாவிய ரீதியில் தன்னார்வ சேவை மற்றும் அதனை நிறைவேற்ற சாதகமான சூழல் அச்சுறுத்தல்களுக்காக வழங்கப்படும் UNV 50 AWARDS விருது, பொதுத்துறைக்காக கிராமிய வீதிகள் மற்றும் விசேட உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சுக்கு கிடைத்துள்ளது.

கிராமிய வீதிகள் மற்றும் விசேட அடிப்படை வசதிகள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ரஞ்சித் திஸாநாயக்கவுக்கு இந்த விருது வழங்கப்பட்டது. கிராமிய வீதிகள் மற்றும் விசேட அடிப்படை வசதிகள் இராஜாங்க அமைச்சு, இலங்கை முழுவதும் நடைமுறைப்படுத்தி வரும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் இச் செயற்பாட்டின் ஊடாக கிராமிய மக்களுக்கு கிடைக்கும் நன்மைகளை கருத்திற் கொண்டு ஐக்கிய நாடுகள் அமைப்பின் இந்த விருது கிடைத்துள்ளது.

உடப்பு தமிழ் பிரதேச சபை

அமைச்சர் டக்ளஸிடம் கோரிக்கை

புத்தளம் உடப்பு பிரதேசத்தில் தமிழ் மக்கள் செறிந்து வாழுகின்ற பிரதேசங்களை இணைத்து புதிய பிரதேச சபை ஒன்றினை உருவாக்கித் தருமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சிக் கட்டு பிதேச சபைத் தலைவர் தட்சணாமூர்த்தி தலைமையில் உடப்பு பிரதேச சமூக பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் நேற்று முன்தினம், (08)) சந்தித்து பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

இதன்போதுஇ உடப்பை சூழவுள்ள பிரதேசத்தில் சுமார் 10 ஆயிரத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில், தமிழ் பிரதேச சபை ஒன்றினை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

அத்துடன் உடப்பு கிராமத்திற்கு அச்சுறுத்தலாக விளங்கும் கடலரிப்பினை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மீனவர் இறங்குதுறை ஒன்றிற்கான தேவை இருப்பதனால் அதனை அமைத்துத் தருமாறும் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

சம்மந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடி தமிழ் பிரதேச சபையை உருவாக்குவதற்கான சாத்தியங்கள் பற்றி ஆராய்வதாக தெரிவித்ததுடன், கடலரிப்பு மற்றும் இறங்குதுறை போன்ற விடயங்கள் தொடர்பாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சகோதரனுடன்

விளையாடிய சிறுவன் பலி

■ எம்.றொசாந்த்

வட்டுக்கோட்டை - தொல்புரம் பகுதியில் வீட்டின் மேல் தளத்தில் சகோதரனுடன் விளையாடிக்கொண்டிருந்த சிறுவன் ஒருவன், கீழே தவறி விழுந்து உயிரிழந்துள்ளான்.

ஜெயசந்திரன் தஜிதரன் (வயது 11) எனும் சிறுவனே, இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார். சிறுவன், நேற்று முன்தினம் (08), தனது வீட்டின் மேல் தளத்தில் சகோதரனுடன் விளையாடிக்கொண்டு இருந்த போது, தவறி விழுந்து படுகாயமடைந்துள்ளார் அதனை அடுத்து, மூளாய் வைத்தியசாலைக்கு சிறுவன் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்ட போதும், சிகிச்சை பலனின்றி அங்கு உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில், வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வாகன இறக்குமதிக்கு அனுமதி இல்லை

2022ஆம் ஆண்டில் வாகன இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்படமாட்டாது என நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அறிக்கை ஒன்றை நேற்று (09) வெளியிட்டு நிதியமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், அடுத்தாண்டு அரச ஊழியர்களின் ஆட்சேர்ப்பு இடம்பெறாது எனவும் நிதியமைச்சர் குறிப்பிட்டார்.

அளம்பிலில்

கரையொதுங்கும் மீன்கள்

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அளம்பில் பகுதியில், உயிரிழந்த நிலையில் மீன்கள் கரையொதுங்கி வருகின்றன.

டொல்பின் வகை மீன்கள் சிலவே, இவ்வாறு உயிரிழந்த நிலையில் கரையொதுங்கி வருகின்றன.

ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம்

பொறுமையாக இருங்கள்

■ பா.நிரோஸ்

வவுனியா - நெடுங்கேணி வெடுக்கு நாறிமலையில் உள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்ள, நீதிமன்ற தீர்ப்பு வரும்வரையில் இந்துக்கள் பொறுமை காக்க வேண்டுமென இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (09) அமர்வில் கூட்டமைப்பு எம்.பியான சார்ள்ஸ் நிர்மலநாதனின் வாய்மூல விடைக்கான வினாவுக்கு பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், வவுனியா-வடக்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள நெடுங்கேணி - வெடுக்கு நாறிமலையில் உள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் முன்னெடுக்கப்பட்ட தொல்பொருள் ஆய்வுகளில் அங்கு பௌத்த மடாலயம் இருந்தமைக்கான இடிபாடுகள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும் இந்த விடயம் தொடர்பில் வழக்கு விசாரணை நீதிமன்றில் உள்ளது என்றார்.

இதன்போது மேலதிக கேள்வியை எழுப்பிய சார்ள்ஸ் எம்.பி. முதலில் தமிழர்களும் பௌத்தர்களாக இருந்தார்கள் என்பதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதற்கான ஆதாரங்கள் பாலி மொழி வரலாற்றில் கூட உள்ளன. எனவே ஆதிலிங்கேஸ்வரர் ஆலய இடத்தில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்களே உள்ளன.

எனவே இதனை வழிபட இந்துக்கள் அனுமதிக்கப்படுவார்களா? இல்லையா? என்பதற்குப் பதிலளியுங்கள் என கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, நாம் இந்துக்களுக்கு எதிரானவர்கள் அல்ல. இந்துக்களின் வழிபாட்டு உரிமைகளை பறிக்கும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை எனவும் கூறியதோடு, இச்சம்பவம் தொடர்பில் வழக்கு விசாரணை முடியும் வரையில் இந்துக்கள் பொறுமை காக்க வேண்டும் எனவும் கேட்டுகொண்டார்.

தமிழர் பிரதேசங்களில்;

நீதிமன்றங்கள் சிங்கள மொழியில் இயங்குவது ஏன்?

■ பா.நிரோஸ்

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்குக், கிழக்கு, மலையகப் பகுதிகளில் உள்ள நீதிமன்றங்கள் சிங்கள மொழியிலேயே இயங்குவதாகத் தெரிவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஏன் இந்த நீதிமன்றங்களில் தமிழில் இயங்க முடியாது எனவும் கேள்வி எழுப்பினார்.

வரவு செலவு திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் நேற்று (09) கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், அநீதியாக தீர்ப்பளிக்கப்பட்டு சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்து வருபவர்களை விடுதலை செய்வதற்காகவே பொதுமன்னிப்பு பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால் இலங்கையில் தங்களது சொந்த இனத்தில் உள்ள தங்களுக்கு நெருங்கிய திருடர்களையும், கொலைகாரர்களையும், குற்றவாளிகளையும் விடுதலை செய்வதற்கே அச்சந்தர்ப்பம் பயன்படுத்தப்படுகிறது என்றார். சிறைச்சாலைக்கு சென்று கைதிகளை துப்பாக்கி முனையில் அச்சுறுத்திய இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, தற்போது நீதி அமைச்சர் அருகில் அமர்ந்துகொண்டிருக்கிறார். இதுவே இந்நாட்டின் நீதித்துறையின் நிலைமை எனவும் கூறினார்.

தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வழும் வடக்குக், கிழக்கு மாகாணங்களில் உள்ள நீதிமன்றங்களில் சிங்கள மொழி ஊழியர்களே அதிகமாக நியமிக்கப்படுகிறார்கள். சிங்கள மொழியில் இவை இயங்குகின்றன எனவும் கூறினார்.

மேலும், தமிழர்கள் வாழும் மலையக பகுதிகளில் கூட முழுமையாக சிங்கள மொழியில் நீதிமன்றங்கள் இயங்குவதாகவும், தமிழர்கள் வாழும் பகுதிகளில் நீதிமன்றங்கள் ஏன் தமிழில் இயங்குவதில்லை? என கேள்வி எழுப்பியதோடு, இதன் பின்னால் பாரிய நிகழ்ச்சி நிரல் ஒன்று உள்ளதாகவும் கூறினார்.

ஞானசார தேரருக்கு எதிராக

ஜனாதிபதி எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன?

■ பா.நிரோஸ்

'ஒரே நாடு, ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியின் தலைவர் ஞானசார தேரரின் செயற்பாடுகள் சந்தோஷப்படும் வகையில் இல்லையென தெரிவித்த எதிர்க்கட்சி எம்.பி தலதா அத்துகோரல, ஞானசார தேரருக்கு எதிராக ஜனாதிபதி எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன? எனவும் வினவினார்.

வரவு-செலவு திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் நேற்று (09) கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், ஒரே நாடு, ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் தலைவர் ஞானசார தேரர் நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் தண்டனை அனுபவித்தவந்த நிலையில், ஜனாதிபதி அவருக்குப் பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார் என்றார்.

ஞானசார தேரரின் செயற்பாடுகள் சந்தோஷம் படும் வகையில் இல்லை. அவர் மற்றொரு தேரரை மோசமாக அச்சுறுத்தும் குரல் பதிவு சமூகவலைத்தளங்களில் வெளியாகி வருகிறது. இது தொடர்பில் ஞானசார தேரருக்கு எதிராக ஜனாதிபதி எடுக்கப்போகும் நடவடிக்கை என்னவெனவும் வினவினார். சட்டமா அதிபர் திணைக்களத்தை அரசியல்மயமாக்க வேண்டாமெனவும் கேட்டுகொண்டார்.

போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு

மரண் தண்டனை வழங்குக

■ பா.நிரோஸ்

பாரியளவிலான போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனை வழங்கி அவர்களை தூக்கிலிட வேண்டுமென தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

வரவு- செலவு திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் நேற்று (09) கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்காக தீவு ஒன்றையாவது கொள்வனவு செய்வது அவசியம் எனவும் கூறிய அவர், போதைப்பொருள் வர்த்தகர்களை கைது செய்து சிறையில் அடைத்தாலும் சிறைச்சாலைக்குள் இருந்துகொண்டு அவர்கள் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகிறார்கள் என்றார்.

எனவே, பாரியளவிலான போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களுக்கு மரணதண்டனை வழங்கி அவர்களை தூக்கிலிட வேண்டும் எனவும் கூறினார். உலக நாடுகள் பல போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு மரணதண்டனை வழங்கி வருகின்றன. பாரியளவிலான போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனை வழங்குவதனூடாக நாட்டுக்குள் போதைப்பொருள் கடத்துவது குறைவடையும் எனவும் அவர் கூறினார்.

பாகிஸ்தானின் பாதுகாப்பு அமைச்சருக்கு

சபையில் ஆளுங்கட்சி கண்டனம்

■ பா.நிரோஸ்

பிரியங்க குமாரவின் படுகொலையை நியாயப்படுத்தும் வகையில், இதுவொரு சாதாரணமாக சம்பவமெனக் கூறிய பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சருக்கு பாராளுமன்றத்தில் ஆளுங் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார கண்டனத்தை தெரிவித்தார்.

சபாநாயகர் தலைமையிலான நேற்றைய (09) பாராளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான வினாவை கேட்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். பாகிஸ்தானில் பிரியங்க குமார படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் அந்நாட்டு பிரதமரும் இம்ரான் கான் சிறப்பாக செயற்படுகிறார். அவர் நினைத்திருந்தால் வேறு காரணங்களைக்கூறி இந்த விடயத்தை மூடிமறைத்திருக்கலாம் ஆனால், அந்நாட்டு பிரதமர் அவ்வாறு செய்யாது நீதியை பெற்றுகொடுக்க அர்ப்பணிப்போடு செயற்படுகிறார் என்றார்.

எனினும் அந்நாட்டு பாகிஸ்தான் பிரதமர் இதனை ஒரு சாதாரண சம்பவமாக கூறியிருப்பது கண்டனத்துக்குரியது எனவும் கூறினார்.

பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9(1) கீழ் கீழ்க்கானும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் வழங்கபடுகின்ற அறிவித்தல்.

சிங்ஹ வென்ஷர்ஸ் (பீவீஎ) எல்டீடி

பி வீ 00249491

இல. 126/2, வல்பொல, முல்லேரியாவ.

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 03.12.2021

கல்முனை மாநகர சபையின்

பட்ஜெட் நிறைவேற்றம்

■ அஸ்லம் எஸ்.மௌலானா

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆளுகையிலுள்ள கல்முனை மாநகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் 15 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

விசேட சபை அமர்வு, மாநகர மேயர் ஏ.எம்.றகீப் தலைமையில் நேற்று முன்தினம் (08) பிற்பகல், இடம்பெற்றது. இதன்போது, வரவு - செலவுத் திட்டத்தை மாநகர மேயர் சமர்ப்பித்து உரையாற்றியதைத் தொடர்ந்து உறுப்பினர்கள் பலரும் பட்ஜெட் தொடர்பில் கருத்துகளை முன்வைத்து உரையாற்றினர். இதையடுத்து பட்ஜெட் பகிரங்க வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

சபையின் மொத்த உறுப்பினர்கள் 41 பேரில் 02 ஆசனங்கள் வெற்றிடமாக உள்ள நிலையில், 32

உறுப்பினர்கள் இந்த அமர்வுக்கு சமூகமளித்திருந்தனர். இவர்களில் 21 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 06 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர். 05 உறுப்பினர்கள் நடுநிலை வகித்திருந்தனர். 07 உறுப்பினர்கள் சபைக்கு சமூகமளித்திருக்கவில்லை.

ஆளும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட ஐக்கிய தேசிய கட்சியின் 12 உறுப்பினர்களுடன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் 04 உறுப்பினர்கள், சாய்ந்தமருது தோடம்பழ சுயேட்சைக் குழுவின் 03 உறுப்பினர்கள், ஹெலிகொப்டர் சுயேட்சைக் குழுவின் ஒர் உறுப்பினர், மான் சுயேட்சைக்குழு உறுப்பினர் ஒருவருமாக 21 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் 03 உறுப்பினர்களும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் 02 உறுப்பினர்கள், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஓர் உறுப்பினரும் எதிராக வாக்களித்தனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் 04 உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஓர் உறுப்பினரும் நடுநிலை வகித்திருந்தனர்.

சாய்ந்தமருது சுயேட்சைக் குழுவின் 05 உறுப்பினர்களும் தேசிய காங்கிரஸின் ஓர் உறுப்பினரும் சபைக்கு சமூகமளித்திருக்கவில்லை. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஓர் உறுப்பினர் வாக்கெடுப்பின்போது சபையில் இருக்கவில்லை.

மன்னாரில் 6 கிராமங்களுக்கு

உயர் ஆபத்து

■ எஸ்.றொசரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில், டெங்கு நுளம்பை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் வகையில், நேற்று (9) முதல் எதிர்வரும் புதன்கிழமை (15) வரை டெங்கு ஒழிப்பு வாரம் அமல்படுத்தப்பட்டு உள்ளது.

இந்த நிலையில், நேற்று (9) காலை 8.30 மணியளவில், மன்னார் மாவட்டச் செயலகத்தில், டெங்கு ஒழிப்பு வார ஆரம்ப நிகழ்வு, -மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தலைமையில் ஆரம்பமானது.

இதன்போது, குழுக்கள் அமைக்கப்பட்டதோடு, பனங்கட்டிக்கொட்டு, சின்னக்கடை பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு குறித்த குழுவினர் சென்று டெங்கு பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

மேலும் பிரதேச செயலகம், உள்ளூராட்சி மன்றங்கள், பாதுகாப்பு துறையினர், சுகாதார திணைக்களம், சமூக மட்ட அமைப்புகள் இணைந்து சிரமதான முறையிலும், குறிப்பாக, டெங்கு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள பனங்கட்டுகொட்டு, எமில் நகர், பெரியக்கடை, பேசாலை - 5, 8ஆம் வட்டாரங்கள், தோட்டவெளி போன்ற கிராமங்கள் உயர் ஆபத்துள்ள இடங்களாக சுகாதார துறையினர் அடையாளப்படுத்தி உள்ளனர்.

குறித்த இடங்களில், எதிர்வரும் ஒரு வாரங்களுக்கு சிரமதானம் மேற்கொள்ளப்பட உள்ளதோடு, அப்பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு விசேட குழுவினர் சென்று வீடுகள் பரிசீலிக்கப்பட்டு அவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு, டெங்கு நுளம்பைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மன்னாரில்

கொரோனாவுடன் டெங்குவும் கைகோர்த்தது

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில், கொரோனா தொற்று அதிகரித்து காணப்படுகிற சூழ்நிலையில், தற்போது டெங்கு காய்ச்சலும் அதிகரித்துக் காணப்படுவதாக, மன்னார் மாவட்டச் செயலாளர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில், டெங்கு கட்டுப்பாடு தொடர்பாக ஆராயும் அவசர கலந்துரையாடல் ஒன்று, நேற்று முன்தினம் (8) காலை 10.30 மணியளவில், மன்னார் மாவட்டச் செயலகத்தில்

நடைபெற்றது. இதன்போதே, அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், தற்போது சுகாதார திணைக்களம் வழங்கியுள்ள தகவல்களுக்கு அமைவாக, 25 தொடக்கம் 49 வயதிற்குற்பட்டவர்களே அதிகம் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக அறியக்கிடைத்துள்ளது என்றார்.

அவர்கள் தொழிலுக்குச் செல்லும் வயதுடையவர்களாக இருக்கின்றமையினாலும், டெங்கு காய்ச்சலானது, வயது குறைந்தவர்களை தாக்கக்கூடியது என்பதனாலும் மக்கள் மிகவும் விழிப்புடனும் அவதானத்துடனும் செயற்படுமாறும், அவர் கேட்டுக்கொண்டார்.

இதற்கு உரிய திணைக்களங்கள் வழங்குகின்ற ஆலோசனைகளுக்கு அமைவாக, கட்டுப்பட்டு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என, அவர் மேலும் தெரிவித்தார்.

பெற்றோல் கடை தீப்பற்றியது

■ ஹஸ்பர் ஏ ஹலீம்

திருகோணமலை, தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி -திருகோணமலை வீதியின் 99ஆம் கட்டை சந்தியில் பெற்றோல் கடையொன்று, நேற்று (09) மதியம் தீப்பற்றிக்கொண்டது.

இதனால் அக்கடை முற்றாக சேதமடைந்துள்ளதுடன், பெண்ணொருவர் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு தடயவியல் பொலிஸார் சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

உளவியல்...

'கடந்த காலத்தைக் குணப்படுத்தி, எதிர்காலத்தைக் கட்டியெழுப்புதல்' தொடர்பான உளவியல் பயிற்சிக் கலந்துரையாடல், காரைதீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு, நேற்று (09) நடைபெற்றது.
தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான செயலகத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்தீபன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், வளவாளராக ஜெனிதா மோகன், கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் கலாசார உத்தியோகத்தர் ரி. பிரபாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (படங்கள்: சகா)

மாற்றுத் திறனாளிகள் மகஜர் கையளிப்பு

■ பாறுக்

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு, கல்முனை பிரதேச மட்ட வலது குறைந்தோர் அமைப்பின் ஏற்பாட்டில், கல்முனை பிரதேச செயலக முன்றலில், விழிப்புணர்வு நிகழ்ச்சியொன்று, நேற்று முன்தினம் (08) நடைபெற்றது.

இதில் மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சமூகத்தில் மாற்றுத் திறனுக்கான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை அமுல்படுத்துமாறு வலியுறுத்தி, பதாகைகளை ஏந்தியவாறு குறித்த விழிப்புணர்வு நடைபெற்றது.

மேலும், இந்த விழிப்புணர்வில் கலந்துகொண்டவர்கள், கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாகத் அலியிடம் மாற்றுத் திறனாளிகளின் கோரிக்கைகள் அடங்கிய மகஜரைக் கையளித்தனர்.

குப்பைகளை வீசுவோர் மீது சட்டம் பாயும்

■ எம்.எஸ்.எம். ஹனீபா

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள முக்கிய கேந்திர நிலையங்கள், வீதிகளில் குப்பைகளை வீசுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென, அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பெரும் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எம். எஸ். அப்துல் மஜீட், நேற்று (09) தெரிவித்தார்.

குப்பைகளை வாகனத்தில் ஏற்றி வந்து, மக்கள் நடமாடும் பிரதான வீதிகளில் இரவு நேரங்களில் கொட்டுவதாக தகவல் கிடைத்துள்ளது.

நடைபாதை வியாபாரத்துக்கு வரும் வியாபாரிகள், வீதி ஓரங்களில் கழிவுப் பொருள்களை வீசிவிட்டு செல்கின்றனர். இவை சுற்றாடலுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுவத்துகின்றன.

வியாபார நிலையங்களில் சேருகின்ற கழிவுப் பொருள்களையும், குப்பைகளை ஓர் இடத்தில் சேமித்து வைத்து பாதுகாப்பான முறையில் அகற்றுமாறு கேட்டுள்ளார்.

மருத்துவபீட மாணவன் மரணம்:

பொலிஸாருக்கு நீதிமன்றம் விடுத்த உத்தரவு

■ எஸ். தில்லைநாதன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் மரணம் தொடர்பில் முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பில் அறிக்கை சமர்பிக்குமாறு, யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் பீட்டர் போல், கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

யாழ். மருத்துவபீட மாணவனான சிதம்பரநாதன் இளங்குன்றன் என்பவர், வாடகைக்கு தங்கியிருந்து கல்வி கற்றுவந்த வீட்டில் மர்மமான முறையில் தூக்கில் தொங்கிய நிலையில், கடந்த வருடம் நவம்பர் 17ஆம் திகதியன்று சடலமாக மீட்கப்பட்டார்.

இது தொடர்பான வழக்கு விசாரணை, நடந்து வருகின்ற நிலையில், இந்த வழக்கு விசாரணை, நேற்று முன்தினம் (08) எடுத்துக் கொள்ளப்பட்ட போது, முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பிலான தகவல்கள் பதியப்பட்டு உள்ளதாகவும் தொலைபேசி இரசாயன பகுப்பாய்வு அறிக்க இன்னும் கிடைக்கப் பெறவில்லை எனவும் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

தொலைபேசியின் இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கையை பெறுவதற்கு இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்துக்கு அறிவிப்பதாக நீதவான் உத்தரவிட்டார்.

புனரமைப்புப் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், நாயன்மார்கட்டுக்குளப் புனரமைப்பு பணிகள், இன்றைய தினம் (09) காலை 10 மணியளவில், யாழ். மாநகர மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது, அக்குளத்தின் மாதிரி திட்ட வரைபும், மக்கள் பார்வைக்காக வெளியிட்டு வைக்கப்பட்டது. (படப்பிடிப்பு: எம்.றொசாந்த், எஸ். நிதர்ஷன்)

சோளச் செய்கையில் பாரிய வீழ்ச்சி

■ ஹஸ்பர் ஏ ஹலீம்

திருகோணமலை, கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மஜீத் நகர் வெல்லாங்குள சோளச் செய்கையில் இம்முறை பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளதாக, செய்கையாளர்கள் கவலை தெரிவித்தனர்.

போதிய பசளை இன்றி காரணமாக சோளச் செய்கை வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் தங்களது வாழ்வாதாரமாக சோளச் செய்கையை நம்பியே வாழ்ந்து வருவதாகவும் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

பல இலட்சம் ரூபாய் முதலீடு செய்து செய்கையில் ஈடுபட்ட போதும் உரிய பயன் கிடைக்கவில்லை. இதனால் பாரிய பொருளாதார பின்னடைவுகளை எதிர்நோக்கியுள்ளோம் எனவும் சோளச் செய்கையாளர்கள் மேலும்

தெரிவித்தனர்.

எனவே, தங்களுக்கான நட்டஈட்டை வழங்க அரசாங்கம் முன்வர வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

"யாழ். மாநகர சபை பாதீடு அங்கிகரிக்கப்படும்"

■ எஸ்.நிதர்ஷன்

யாழ். மாநகர சபை உறுப்பினர்களால், வரவு - செலவுத் திட்டம் ஏகமனதாக அங்கிகரிக்கப்படும் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாக, யாழ். மாநகரசபை மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ். நாயன்மார்கட்டு குளப் புனரமைப்பு பணிகளை, நேற்றைய தினம் (09) ஆரம்பித்து வைத்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே, அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், வரவு - செலவுத் திட்ட தயாரிப்பின் போது, அனைத்து உறுப்பினர்களுடனும் கலந்து பேசி, அவர்களுடைய கோரிக்கைகளையும் உள்ளடக்கியே தயாரித்து இருப்பதாகத் தெரிவித்தார்.

ஆகவே, அவர்களுடைய கோரிக்கைகளை உள்ளடக்கிய வரவு - செலவுத் திட்டத்தை அவர்களே தோற்கடிப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை எனவும், அவர் கூறினார்.

"யாழ். மாநகர சபையில் அங்கம் வகிக்கின்ற அனைத்துக் கட்சிகளின் தலைமைகளிடமும், மாநகர சபையில் முன்வைக்கப்படுகின்ற வரவு- செலவு திட்டத்தை ஆதரிக்க வேண்டும் என நான் பகிரங்கமாகவும் அன்பாகவும் கோரிக்கையை விடுக்கின்றேன்" என்றார்.

ஆபத்துக்கு மத்தியில் தோணியில்

ஆற்றைக் கடக்கும் மக்கள்

■ அருள்ஷான்

தெரணியகல பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பாலகம், பெலேன, பல்லேல ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மக்கள், களனி ஆற்றைக் கடப்பதற்கு இந்தச் சிறிய தோணியையே பயன்படுத்துகின்றனர்.

மழைக்காலங்களில் இந்த மக்கள் எட்டியாந்தோட்டை நகருக்கு வருவதாக இருந்தால், இந்தத் தோணியைப் பயன்படுத்தி களனி ஆற்றை கடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அதிக மழைக்காலங்களில் இப்பிரதேசத்தில் இருந்து பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள், பல நாள்களாக பாடசாலைக்குச் செல்ல முடியாமல் வீட்டிலேயே இருப்பதாக கவலை தெரிவிக்கின்றனர்.

பாடசாலை மாணவர்கள் களனி ஆற்றில் விழுந்து உயிர் தப்பிய சந்தர்ப்பங்களும் உள்ளதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

'கிராமத்துடன் சந்திப்புக்கு' ஜனாதிபதி தெரணியகல பிரதேசத்துக்கு வருகைத் தந்த போது, மக்கள் தமது குறையை தெரிவித்துள்ள நிலையில், இதுவரையில் எவ்வித தீர்வும் இந்த மக்களுக்கு வழங்கப்படவில்லை.

சாவியை கொத்தி சென்றது சேவல்

ஆட்டுத் தொழுவமானது கலாசார மண்டபம்

■ நிலமேகம் பிரசாந்த்

வட்டக்கொடை மேற்பிரிவு தோட்டத்தில் 2 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட கலாசார மண்டபமானது, ஆட்டுத் தொழுவமாக மாறியுள்ளது.

ஏழு வருடங்களுக்கு முன்னர் வட்டக்கொடை மேற்பிரிவு தோட்டத்தில் கலாசார மண்டமொன்று அவசியமென மக்கள் விடுத்திருந்த கோரிக்கையை அடுத்து, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஊடாக 2 மில்லியன் ரூபாய் செலவில் கலாசார மண்டபம் கட்டப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

ஆனால், இன்று அம்மண்டபம் எவ்வித பாவனையும் இன்றி, ஆடுகளின் தொழுவமாகவும் இரவில் பன்றிகளின் இருப்பிடமாகவும் மாறியுள்ளது.

குறித்த மண்டபம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸால் நிர்மானிக்கப்பட்டதால், மண்டபத்தின் சாவியை வைத்துக்கொண்டு பொதுசேவைகளுக்கு பயன்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் மறுப்பு தெரிவிப்பதால், அம்மண்டபத்தை மக்கள் பயன்படுத்த முன்வருவதில்லை. இதனால் அப்படியே அம்மண்டபம் கைவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வட்டக்கொடை மேற்பிரிவு வட்டார உறுப்பினர் விஜயகுமாரிடம்

வினவியபோது, "குறித்த மண்டபத்தின் சாவி என்னிடமே உள்ளது. மக்களுக்காகக் கட்டப்பட்ட மண்டபம் இது. ஆனால் இதை தோட்டத்திலுள்ளவர்கள் சிலர் அபகரிக்க முற்பட்டதால், சாவியை நநான் வைத்துள்ளேன்" என்றார்.

மேலும், கோவில் பணிகளுக்காகவும், தோட்ட வைபவங்களுக்காகவும் கட்டப்பட்டு கையளிக்கப்பட்ட மண்டபத்தை மக்கள் பயன்படுத்த முன்வரவில்லை. அதனால் கொட்டக்கலை பிரதேச சபையூடாக இரண்டரை இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு மண்டபத்தின் உட்புறத்தே குறித்த தோட்ட கிராமசேவகர் காரியாலயம், சமூர்த்தி காரியாலயம் போன்றவற்றை அமைக்க பகுதி பகுதியாக பிரிக்கப்பட்டதுடன், மண்டபத்தின் பாதுகாப்புக்காக பத்து இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீட்டில் மதில் ஒன்றையும் அமைத்துள்ளேன் என்றார்.

இந்த விடயம் தொடர்பில், கொட்டகலை பிரதேச சபை தவிசாளர் ராஜமணி பிரசாந்த் தெரிவிக்கையில், "இம்மண்டபம் குறித்த பிரச்சினை தொடர்பில் பல தடவைகள் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. ஆனால் கொரோனா சூழ்நிலையாலும் பிரதேச சபைகளுக்கு ஒதுக்கப்படும் நிதி குறைவாக கிடைக்கின்றமையாலும் குறித்த மண்டபத்துக்கான நிதியை வழங்க முடியாது உள்ளது. எனவே முடிந்தவரை விரைவில் மண்டபத்தை புனரமைத்து, மக்கள் பாவனைக்கு கையளிக்க நடவடிக்கை எடுப்பேன்" எனத் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சின்னம், சேவல் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அக்குறணையிலும் இராகலையிலும்

சமையல் எரிவாயு அடுப்புகள் வெடித்துப் பறந்தன

■ மொஹொமட் ஆஸிக், ஆ.ரமேஸ்

அக்குறணை பிரதேசத்தில் நேற்று (09) இரண்டு சமையல் எரிவாயு அடுப்புகள் வெடித்துள்ளதாக அலவத்துகொடை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அக்குறணை-தெழும்புகஹவத்தை பிரதேசத்திலும் பானகமுவ பிரதேசத்திலும் இவ் இரு சம்பவங்களும் பதிவாகியுள்ளன. அதன் காரணமாக எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதிகாலை வேளையில் வெடித்துள்ளதுடன், தெழும்புகஹவத்தையில் வெடித்த அடுப்பு அணைக்கப்பட்டிருந்த நிலையில் வெடித்துள்ளது.

இது தொடர்பில் அலவத்துகொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, இராகலையில் சமையல் எரிவாயு அடுப்பு வெடிப்பின் முதலாவது சம்பவம் நேற்று(09) காலை இராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மந்திரிதன்ன கிராமத்தில் பதிவாகியுள்ளதாக இராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டிலிருந்த பெண் ஒருவர் சமையலுக்கு தயாராகி அடுப்பை பற்ற வைத்த வேளையில், திடீரென அடுப்பு வெடித்து தீ பற்றியதாக பொலிஸாருக்கு தெரிவித்துள்ளனர்.

இராகலை பொலிஸார் நிலைமையை பார்வையிட்டு, விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

பெயர் மாற்றப்பட்டது

மொனராகலை கல்வி வலயத்துக்கு உட்பட்ட படல்கும்பர கோட்டத்தில் அமைந்துள்ள மொ/ கமெவெல தமிழ் மகா வித்தியாலயத்தின் பெயர் மொ/ திருவள்ளுவர் தமிழ் மகா வித்தியாலயம் என்று பெயர் மாற்றப்பட்டு நேற்று (9) பாடசாலையின் அதிபர் சந்தனம் இராஜேந்திரனால் திரைநீக்கம் செய்யப்பட்டது. (ராமு தனராஜா)

பள்ளத்துக்குள் பறந்து சென்ற கார்

மதுபோதையில் இருந்த சாரதி படுகாயம்

■ எஸ்.கணேசன்

தலவாக்கலை சென். கிளையார் பகுதியில் நேற்று (9) அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில், சாரதி படுங்காயமடைந்து, நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நுவரெலியா பகுதியிலிருந்து கொட்டகலை பகுதிக்குச் சென்றுகொண்டிருந்த காரொன்று நுவரெலியா - ஹட்டன் பிரதானவீதியில், சென்.கிளையார் பகுதியில் வீதியை விட்டு விலகி சுமார் 100 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

மேற்படி காரில் சாரதி மட்டும் பயணித்துள்ளதாகவும், அவரே இவ்வாறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சாரதி மதுபானம் அருந்தியிருந்ததாகவும், இதனால் அவரின் கவனயீனம் காரணமாகவே இவ்வனர்த்தம் நேர்ந்துள்ளதாக தலவாக்கலை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சுகாதார பணியாளர்களின் பணிபகிஸ்கரிப்பால்

நோயாளர்கள் அவதி

■ எஸ்.சதீஸ்

சுகாதார பணியாளர்களின் ஆர்ப்பாட்டம் காரணமாக டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு வந்த நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டனர்.

ஏழு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, மத்திய மாகாண சுகாதார பணியாளர்கள் நேற்று (9) காலை தொடக்கம் 24 மணித்தியால பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிலையில், இவர்களின் தொழிற்சங்க நடவடிக்கை குறித்து அறிந்திராமல், கிளங்கன் வைத்தியசாலைக்கு வருகை தந்த அநேகமான நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதோடு ,நோயாளர் சிலர் ஏமாற்றத்துடன் வீடு திருப்பினர்.

கண்டி நகரின் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்த

புதிதாக நான்கு சுரங்கப் பாதைகள்

■ சேஹான் செனவிரத்ன

கண்டி நகரில் காணப்படும் அதிக வாகன நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கான மாற்று வழியாக கண்டி நகருக்குள் நுழையும் நான்கு நுழைவாயில்களில் 252 மில்லியன் செலவில், கொரியாவின் நிதியுதவி மற்றும் இலங்கை அரச முதலீட்டுடன் சுரங்கப் பாதைகளை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

5.5 கிலோமீற்றர் தூரத்தில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, தெய்யன்கேயிலிருந்து சுதுஹும்பல வரை 900 மீற்றர் வரையும் சுதுஹும்பலயிலிருந்து போகம்பறை வரை 660 மீற்றரும் அம்பிட்டியவிலிருந்து ரத்துபோக்குவ வரை 1,120 மீற்றர் வரையும் ரத்துபோக்குவையிலிருந்து தென்னக்கும்பர வரை 1,680 மீற்றர் தூரம் வரை இந்த சுரங்கப் பாதைகள் அமைக்கப்படவுள்ளன.

ஹட்டனில் புதிதாக பத்து தொற்றாளர்கள்

அடையாளம் காணப்பட்டனர்

■ சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன்- டிக்கோயா நகரசபைக்குட்பட்ட பிரதேசங்களில் புதிதாக 10 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என, ஹட்டன்- டிக்கோயா நகர சபையின் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் 45 பேர், சுயதனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர்.

அத்துடன் குறித்த தொற்றாளர்கள் ஹட்டன்- காமினிபுர, ஆரியகம, சமணலகம, கேம்ப்வெள, டிக்கோயா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றம் முதல் பாதையோரம் வரை

என் குரல் ஒலிக்கும்

காலச் சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் மக்களின் தேவைகளை அறிந்து செயல்படுவது மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் என்னுடைய கடமையும் பொறுப்புமாகும் என தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் , ஆயிரம் விமர்சனங்கள் எழுந்தாலும் பாராளுமன்றம் முதல் பாதையோரம் வரை எனது குரல் ஒலிக்கும் என்றார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், ஆயிரம் ரூபாய் அடிப்படை வேதனம் என்ற கோரிக்கை ஒரு தசாப்தத்திற்கு முன்னர் இருந்த வாழ்க்கை செலவுக்கு போதுமானதாக இருந்தமையினால் முன்மொழியப்பட்டது.

ஆனால் தற்சமயம் அதுகுறித்து செல்லும் வாழ்க்கை செலவிற்கு ஏற்றாற்போல் குறைந்தது 2,500 ரூபாய் ஆக அதிகரிக்கப்பட வேண்டும் . பெருந்தோட்ட மலையக மக்களின் வாழ்க்கைப் பின்னணி வாழ்வாதார சிக்கல் என்பவற்றை நன்கு அறிந்து உணர்ந்தவன் என்ற ரீதியிலும் மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியிலும் காலத்தின் சூழ்நிலைக்கேற்ப மக்களின் தேவைப்பாடுகளை கருத்திற்கொண்டு தூர நோக்குடன் செயற்பட வேண்டும்.

அதன் காரணமாகவே பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தை 2,500 ரூபாவை அதிகரிக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்திருந்தேன். விமர்சனங்கள் ஆயிரம் எழலாம் ஆனால் என் தொப்புள் கொடி உறவுகளுக்காக பாராளுமன்றம் முதல் பாதையோரம் வரை என் குரல் ஒலித்துக் கொண்டே இருக்கும் என கருத்து தெரிவித்தார்.

குடியிருப்புகளுக்கு மத்தியில் வாகன திருத்துமிடத்தால்

குடியிருப்பாளர்களுக்கு அசௌகரியம்

■ சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன்- வில்பிரட்புர பகுதியில் வீட்டுத் தொகுதிகளுக்கு அருகில் சட்டவிரோதமாக நடத்திச் செல்லப்படும் வாகனம் திருத்துமிடம் காரணமாக அயல்வாசிகள் பல்வேறு சிரமங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

குறித்த வாகன திருத்துமிடத்தின் உரிமையாளர், தமது வீட்டுக்கு முன்பாக அமைந்துள்ள வீதியில் வாகனங்களை நிறுத்தி வைத்து பழுதுபார்க்கும் வேலைகளை முன்னெடுப்பதால், அயலவர்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

குறித்த திருத்துமிடத்தின் உரிமையாளருக்கு எதிராக ஹட்டன் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், குறித்த வாகன திருத்துமிடத்தை அங்கிருந்து

அப்புறப்படுத்துமாறு, நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், சந்தேகநபர் தொடர்ச்சியாக குறித்த இடத்திலேயே வாகன திருத்துமிடத்தை நடத்திச் செல்வதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

கையேந்தி யாசகம் செய்யும் நிலையில் முன்னாள் போராளிகள்

இறுதி யுத்தத்தை நினைத்துப் பார்த்தால் மயிர்க்கூச்செறியும். அந்தளவுக்கு மனித பேரவலங்கள் நிரம்பியிருந்தன. யுத்தம் நிறைவடைந்து 12 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், முன்னாள் போராளிகளும் அவர்களுடைய குடும்பத்தினரும் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். பெண் தலைமைத்துவ குடும்பங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கணிசமான எண்ணிக்கையில் இருக்கின்றன. வாழ்க்கையை கொண்டுநடத்த முடியாமல் திணறும் பல குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், அன்றாடம் தவறான முடிவுகளை எடுத்துவிடுகின்றனர்.

ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக அவ்வப்போது 'புலிப்பூச்சாண்டி' காட்டப்பட்டு, இரவோடு இரவாக, முன்னாள் போராளிகளின் வீட்டுக்கதவுகளும் தட்டப்படுகின்றன. குறிப்பாக, மாவீரர் வாரத்துக்கு முன்னர், இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றன. சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் நிரபராதிகளாக தீர்ப்பளிக்கப்பட்ட பலரும் சந்தேகத்தின் பேரில் மீண்டும், மீண்டும் கைது செய்யப்பட்டமை கசப்பான உண்மையாகும்.

இதற்கிடையே, ஆயுதங்களும் கைப்பற்றப்படும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. வீடுகளுக்குள்ளும் வீட்டு வளவுக்குள்ளும் மறைத்து வைக்கப்படிருக்கும் ஆபத்தான ஆயுதங்கள், பெரும் அனர்த்தத்தை ஏற்படுத்திவிடும். அவ்வாறுதான், இரும்பு பொருளென நினைத்து, குண்டொன்றை அறுத்துக்கொண்டிருக்கும் போது, அக்குண்டு வெடித்ததில், ஒருவர் மரணமடைந்து மற்றுமொருவர் காயமடைந்தார்.

இவற்றுக்கெல்லாம் மேலாக, பாதுகாப்புத் தரப்பினரிடம் கையளித்த தங்களுடைய உறவினர்களைத் தேடியலையும் பெற்றோரினதும் உறவினரினதும் போராட்டம், 'அனுமன் வால் போல்' நீண்டுகொண்டே செல்கின்றது.

இதற்கிடையே, புனர்வாழ்வு அளிக்கப்பட்டதன் பின்னர், போராளிகள் பலரும் சுயதொழில்களில் ஈடுபட்டுள்ளனர். வேலைவாய்ப்புகளின்றி சிலர் இருக்கின்றனர். அவ்வாறானவர்களுக்கு உறுதியளித்ததை அரசாங்கம் செய்யவேண்டும். முன்னுரிமையின் அடிப்படையில் பட்டியலில் முதலாவதாக இருக்கவேண்டியவர்கள், வீதிகளில் யாசகம் செய்யவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

வாக்குகளைப் பெறுவதற்காக மட்டுமே, அலங்கரிக்கப்பட்ட வார்த்தைகளை அள்ளிவீசி, மக்கள் மனங்களைக் குளிரச் செய்துவிட்டு, ஆட்சிப்பீடம் ஏறியதன் பின்னர், அவர்களையும் கைவிடுவது, நல்ல அரசாங்கத்துக்கு அழகல்ல. ஆகையால், முன்னாள் போராளிகளுக்கு தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுப்பது அரசாங்கத்தின் பாரிய பொறுப்பாகும்.

அதற்காக, அரசாங்கத்துக்கு தொடர்ச்சியாக அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும். ஒவ்வொரு பக்கங்களிலிருந்தும் கோரிக்கைகள் விடுக்கப்பட வேண்டும். பத்தோடு பதினொன்றாக இல்லாமல், விசேட கவனத்தைச் செலுத்தி, முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு வழிசமைத்துக் கொடுக்கவேண்டும்.

இல்லையேல், கடந்த 12 ஆண்டுகளாகவும் அதற்கு முன்னரும் அனுபவித்த துன்பங்களை, முன்னாள் போராளிகளின் குடும்பத்தினரும், அவர்களின் பிள்ளைகளும் அனுபவிக்கும் நிலைமை ஏற்பட்டுவிடும். இதனைக் கையேந்தி யாசகம் செய்வதன் ஊடாக, நிவர்த்தி செய்துவிடமுடியாது என்பதை நினைவூட்டுகின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

வாழ்வியல் தரிசனம்

நீயும் நானும் பேசாது போனாலும், உன் சுவாசம் என்னுள் வீசுவது போலவே இருக்கின்றது. உனது வாசனை என்றும் என்னை உற்சாகப்படுத்திய வண்ணம் இருக்கிறது.

உனக்கு என்னிடம் என்ன கோபம்? இல்லத்தில் கோபம் நீண்ட நாள்களுக்கு இருக்கலாகாது. இன்று குடும்பங்களில், சின்னச் சின்னக் கோபங்கள் தானே விஸ்வரூபம் எடுக்கின்றன.

வாழ்க்கையை இரசிக்க சினத்தை விட்டுவிட வேண்டும் அல்லவா? குடும்ப வாழ்க்கை பரம்பரைக்கானது. குடும்ப உறுப்பினர்கள் யாவருமே, சினம் தவிர்த்து, விட்டுக்கொடுக்கும் பரந்த மனப்பான்மையை உருவாக்கிட வேண்டும்.

எங்களின் சின்னக் கோபத்தை, நீ அறிவாய். வாழ்க்கையில் ஒவ்வொரு கணப்பொழுதும் முக்கியமானது. குழப்பமற்ற நிலைதான் வலிமையை உருவாக்குகின்றது.

மன்னித்தல், தவறுகளை ஏற்றுக்கொள்ளல் என்பன சந்தோஷமான அன்பளிப்புகளை வழங்கும். அன்பானவளே என்னுள் வாழ்பவள்; எனக்காக வாழ்பவளே புன்னகை பூத்திடு!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

கடிதங்கள்

யானைகள் அட்டகாசம்:

விவசாய நிலங்கள் பாதிப்பு

வாழைச்சேனை கமநல சேவைக்கு உட்பட்ட மக்குளான பள்ளிமடு வயல் பிரதேசத்துக்குள் புகுந்த காட்டு யானைகளால் விவசாயிகளின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

காட்டு யானைகள், குறித்த பகுதிக்குத் தொடர்ச்சியாக வருகை தருவதன் காரணமாக, வேளாண்மை வளர்ந்து வரும் நிலையில், அவற்றைத் துவம்சம் செய்வதுடன், சோளம், கச்சான் போன்றவற்றையும் அழிப்பதுடன், வயல் வாடி குடிசைகளையும் சேதப்படுத்துவதுடன் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் மாட்டு வண்டிலையும் தூக்கி எறிவதுடன், பாவனைப் பொருட்களையும் சேதப்படுத்திச் செல்கின்றன.

குறித்த கண்டத்தில் விவசாய செய்கை மேற்கொண்டு, 40 நாள்கள் கடந்த நிலையில், காட்டுக்குள் இருந்து யானைகள் மூன்று தடவைகள் வந்து அழித்துச் சென்றுள்ளன. "நாங்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் கடன்பட்டு, விவசாயச் செய்கையை மேற்கொண்டுள்ளோம். இந்நிலையில், காட்டு யானைகளால் தொடர்ந்து சேதம் ஏற்படுவதால், கஷ்டத்தை அனுபவித்து வருகிறோம்" என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில், யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாகவும் யானைகளின் தொல்லையில் இருந்து, விவசாயிகளின் உயிர்களையும் வேளாண்மை செய்கைகளையும் பாதுகாப்பதற்கு, அரசாங்க அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

எம்.எம். அஹமட் அனாம்

2022க்கான முன்னோட்டம் – 02:

காலநிலைக் குற்றவாளிகள் யார்?

தெ. ஞாலசீர்த்தி
மீநிலங்கோ

ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக, நாம் வாழும் பூமியையும் இயற்கையையும் மனிதன் தொடர்ச்சியாகப் பழிவாங்கி வந்திருக்கிறான். இப்போது இயற்கையின் முறை; இதை நாம், கடந்த ஒரு தசாப்தகாலமாக, மிகவும் தெளிவாக உணர்கின்றோம்.

காலநிலை மாற்றம், எமது வாழ்வைத் திருப்பிப் போட்டிருக்கின்றது. ஆனால், அதற்கு நாம் தயாராக இருக்கின்றோமா? இயற்கையையும் பூமியையும் நேசிக்கின்றோமா, பிள்ளைகளுக்கு அவற்றை நேசிக்கக் கற்றுக் கொடுக்கின்றோமா? இக்கேள்விகளுக்கான பதிலை, நாம் ஒவ்வொருவரும் கேட்டாக வேண்டும்.

வீதிகளில் வீசப்படும் குப்பைகள், பக்கத்துக் காணியில் கொட்டப்படும் கழிவுகள், அளவுகடந்த பிளாஸ்டிக் பாவனை, தண்ணீரை விரயமாக்குதல், தேவைக்கதிகமான சுவட்டு எரிபொருட்களின் பாவனை என, எமது அன்றாட வாழ்வு, இயற்கை மீதான வன்முறைகளால் நிரம்பிக் கிடக்கிறது.

காலநிலை மாற்றத்தின் கொடும் விளைவுகளுக்குப் பதில் சொல்ல வேண்டியது யார் என்ற வினா, உலக அரங்கில் பதிலற்ற கேள்வியாகத் தொடர்கிறது.

காலநிலை மாநாடுகள் காலம் தவறாமல் நடக்கின்றன. பேசுவதும் பேசுவது பற்றிப் பேசுவதுமாய் காலங்கள் கடக்கின்றன. இலங்கை போன்ற மூன்றாமுலக நாடுகளே, காலநிலை மாற்றத்தின் விளைவுகளால் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகின்றன. ஓர் உதாரணத்தை மட்டும் பார்க்கலாம்.

பவளப் பாறைகள் அழிவுறுதல் மிகப்பாரிய நெருக்கடியாகும். குறிப்பாக, யாழ்ப்பாணக் குடாநாட்டின் பாதுகாப்பும் நிலத்தடி நீரின் இருப்பும் மீன்வளமும் பவளப்பாறைகளில் மிகவும் தங்கியுள்ளது. உலகளாவிய பவளப்பாறைகள் கண்காணிப்பு வலைப்பின்னல், கடந்த ஒரு தசாப்தத்துக்கும் மேலாக, உலகில் பவளப்பாறைகளின் சிதைவையும் அழிவையும் ஆராய்ந்து அறிக்கைப்படுத்தி வருகிறார்கள்.

இவர்களின் 2020ஆம் ஆண்டுக்கான அறிக்கையின்படி, 14 % மான பவளப்பாறை மேடுகள் அழிந்தமைக்கு, கடல் மேற்பரப்பில் ஏற்பட்ட வெப்பநிலை அதிகரிப்பே காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றத்தின் ஒரு முக்கியமான விளைவே, கடல் மேற்பரப்பில் வெப்பநிலை அதிகரிப்பு. இதன் துணை விளைவாக கடல் அமிலமயமாதலும் நிகழ்கின்றது. இரண்டும் சேர்ந்து, பவளப்பாறை மேடுகளின் அழிவுக்குப் பங்காற்றியுள்ளன.

வளம்மிக்க கடலின் குறியீடாக, பவளப்பாறை மேடுகள் விளங்குகின்றன. 25 % மான கடல் வாழ் உயிரினங்களின் இருப்புக்கு, இந்தப் பவளப்பாறை மேடுகள் காரணமாக இருக்கின்றன. இவை, பல அரிய கடல்வாழ் உயிரினங்களின் வாழ்விடமாகவும் உணவுச் சுரங்கமாகவும் விளங்குகின்றன.

பூமியின் மொத்தக் கடற்பரப்பில் வெறும் 0.2 % மான பகுதியில் மட்டுமே, இந்தப் பவளப்பாறை மேடுகள் அமைந்துள்ளன. கடல் மேற்பரப்பு வெப்பமடைதலுக்கு அடுத்தபடியாக, கடலை மாசுபடுத்தல், கட்டுப்பாடற்ற மீன்பிடி, கடலோர அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியனவும் பவளப்பாறைகளின் அழிவுக்குக் காரணமாகின்றன என்று, 'உலகில் பவளப்பாறைகளின் நிலை' என்ற அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

தென்னாசிப் பிராந்தியம் குறித்துக் கவனம் செலுத்தியுள்ள இவ்வறிக்கை, இப்பகுதியில் அல்காக்களின் அளவு, கடந்த பத்தாண்டுகளில் 20 %த்தால் அதிகரித்துள்ளது. இது பவளப்பாறைகள் அழிவதைக் குறிகாட்டுகின்றது.

இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம் யாதெனில், உலகளாவிய காலநிலை மாற்ற ஆய்வுகளில், மீளவியலாத புள்ளியைத் தீர்மானிக்கும் விடயங்களில் பவளப்பாறைகளின் சிதைவும் முக்கியமானதாக அமைகின்றது.

உரிமைக்கும் மண்ணுக்குமான நீண்ட போராட்டத்தைச் செய்த பூமியை, இயற்கை மீளப்பெற்றுக் கொள்வதற்கான வழியை நாமே விரைந்து ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோமா? ஊரிமை பற்றியும் விடுதலை பற்றியும் பேசுவதற்கு, மனிதர்கள் வாழ்வதற்கு ஏதுவான பூவுலகம் நிலைக்க வேண்டும். அது குறித்து நாம் கவலைப்பட்டிருக்கிறோமா, அக்கறைப்பட்டுள்ளோமா?

ஆரியகுளம் மகிழ்வூட்டல் திடல் திறக்கப்பட்ட மறுநாள், அதைச் சுற்றி வைக்கப்பட்ட குப்பைத் தொட்டிகளுக்குள் குப்பைகளை வீசாமல், வெளியே குப்பைகள் வீசப்பட்டு இருந்ததையும் சமூக வலைத்தளங்களில் பகிர்ந்திருந்தனர். இதுவொரு சின்னக் 'குப்பைப் பிரச்சனை' என்று கடந்துவிட இயலாதபடி, மனித நடத்தையும் சமூகப் பொறுப்புணர்வும் இத்தோடு பின்னிப் பிணைந்துள்ளன.

காலநிலை மாற்றம் என்பதை, வெறுமனே 'புவியின் வெப்பநிலை அதிகரிப்பு' என்ற வட்டத்துக்குள் சுருக்குவதன் ஊடு, இப்பாரிய மனிதகுல நெருக்கடியின் தீவிரத்தன்மையைக் குறைக்கும் வேலைகள் நடக்கின்றன. ஆனால், இந்நெருக்கடி தொடர்ச்சியாக அதிகரித்த வண்ணமுள்ளது. கட்டற்ற நுகர்வு, கட்டற்ற கழிவு உற்பத்திக்கும் கட்டற்ற சக்திப் பயன்பாட்டுக்கும் வழிவகுக்கின்றது.

கட்டற்ற நுகர்வை, திறந்த சந்தைப் பொருளாதாரம் ஊக்குவிக்கின்றது. அதற்கான பொருளாதார வழிமுறைகளை வங்கிகளும் அரசுகளும் ஏற்படுத்திக் கொடுக்கின்றன. கடந்த இரண்டாண்டுகளில் அத்தியாவசியம் இல்லாத எத்தனை பொருட்களை நாம் வாங்கியிருக்கிறோம் என்பதை பொறுமையாகச் சிந்தித்தால் புரியும். பொருட்களைத் திருத்திப் பயன்படுத்தும் பழக்கம் எம்மிடம் அருகி வருகிறது. 'Use it and throw it' என்பதே, இன்றைய சந்தையின் தாரக மந்திரமாகும். இதனால் உருவாகும் கழிவுகளை, எங்கே கொட்டுவது? அதன் விளைவுகளின் விலையைக் கொடுக்கப் போவது யார்?

காலநிலை மாற்றத்தால், எமது உணவுகளுக்கான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. விவசாயம் தொடர்ச்சியான நெருக்கடியில் உள்ளது. வேளாண்சூழலியல் (agroecology) பற்றி, ஆழமாகச் சிந்தித்தாக வேண்டும். விவசாயத்தையும் விவசாயிகளையும் நிலத்தையும் காப்பாற்றிக் கொள்வதற்கான போராட்டத்தில், தவிர்க்கவியலாத பங்கை வேளாண்சூழலியல் வகிக்கிறது. இதேவேளை, பல்தேசியக் கம்பெனிகள் இலாபம் பார்க்கும் புதிய துறையாக, வேளாண்சூழலியல் பார்க்கப்படுகின்றது. இதற்கு அரசுகளும் என்.ஜீ.ஓக்களும் உதவுகின்றன.

இவை மூன்று விடயங்களை அடிப்படையாகச் செய்கின்றன. முதலாவது, தொழில்நுட்பத் தீர்வுகளே வேளாண்சூழலியலில் சாத்தியமாகும் என்று அனைவரையும் நம்ப வைக்கின்றன. இதன்மூலம், இயற்கை விவசாயம் மட்டுமன்றி, விவசாயிகளும் நிலத்திலிருந்து பெயர்க்கப்படுகிறார்கள். நிலங்கள் பல்தேசிய நிறுவனங்கள் வசமாகின்றன.

இரண்டாவது, வேளாண்சூழலியல் புதிய வியாபார வாய்ப்புகளை உருவாக்குகிறது, எனவே, இது அனைவருக்கும் நல்லது என்ற பொய்யை அரசும் என்.ஜீ.ஓக்கள், பல்தேசியக் கம்பெனி ஆகியவற்றின் கூட்டு, மக்களுக்குத் தொடர்ந்து சொல்கிறது.

மூன்றாவது, அரச-தனியார் கூட்டாண்மை என்ற பெயரில், அரச நிலங்களும் அரச நிதியும் பல்தேசியக் கம்பெனிகளுக்குத் தாரை வார்க்கப்படுகின்றன. இதை விரிவாக விளங்கிக் கொள்ள, அண்மையில் வெளியான Junk Agroecology: The corporate capture of agroecology for a partial ecological transition without social justice என்ற அறிக்கையை வாசியுங்கள்.

கடந்த இரண்டு ஆண்டுகளை கொவிட்-19 பெருந்தொற்று தின்றுள்ளது. பெருந்தொற்றும் காலநிலைப் பேரிடர்களும் உலகில் ஏற்படுத்தியுள்ள பொருளாதாரத் தாக்கம் மிகப்பெரிது. அடுத்தாண்டும் இதே நிலை தொடருமாயின் பாதிக்கப்படப்போவது எளிய மக்களே. இதற்கு தீர்வு இல்லையா என நீங்கள் நினைக்கலாம். நல்ல செய்தியொன்றுண்டு.

Paying for the pademic and a just transtion என்ற அறிக்கை பெருந்தொற்றாலும் காலநிலை மாற்றத்தாலும் ஏற்பட்ட மேலதிகச் செலவு ஆண்டொன்றுக்கு 9.410 ட்ரிலியன் அமெரிக்க டொல என்று இனங்காணுகிறது. ஆனால், இந்தத் தொகையை மீளப்பெறுவதற்கான வழிவகைகள் எம்மிடம் உள்ளன. இதன் மூலம் காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த பங்களிப்பதோடு நின்றுநிலைக்கத்தக்க அபிவிருத்தியை மேற்கொள்ளவும் இயலும்.

இதற்காக 10 முன்மொழிவுகளை இவ்வறிக்கை முன்மொழிகின்றது. இதன்மூலம் ஆண்டுதோறும் 9.457 ட்ரிலியன் அமெரிக்க டொலரைப் பெற்றுக் கொள்ளவியலும். இந்தப் பத்து முன்மொழிவுகளும் அடிப்படையில் மூன்று விடயங்களையே முன்னிறுத்துகின்றன. செல்வம் அதிகம் உள்ள இடத்தில் அவற்றுக்கு வரி வசூலிக்கப்பட வேண்டும். சுவட்டு எரிபொருட் பாவனைக்கு விதிக்கப்படும் அதிகப்படியான வரிகளின் ஊடு, அதன் பாவனை குறைக்கப்படுவதோடு அதன்மூலம் கிடைக்கும் வருமானம் காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த செலவழிக்கப்படலாம். மூன்றாவது, நாடுகள் இராணுவத்திற்கு ஒதுக்கும் நிதியைக் குறைப்பதன் ஊடு பெருமளவில் நிதி மிச்சப்படும்.

'எமது குழந்தைகளுக்கான உலகம் யாது' என்ற கேள்வியோடு நிறைவு செய்ய விரும்புகிறேன். எங்கள் குழந்தைகள் வாழும் வாழப்போகும் உலகம் பாதுகாப்பானதா, அதற்கு நாங்கள் பங்களித்திருக்கிறோமா? யுனிசெவ் அமைப்பு The climate crisis is a child rights crisis என்ற தலைப்பில் அமைந்த அறிக்கையொன்றை அண்மையில் வெளியிட்டது. இதன்படி, (1) உலகில் உள்ள குழந்தைகளில் மூன்றில் ஒருவர் வெப்பஅலைகளால் தீவிரமாகப் பாதிக்கப்படுகிறார். புவி வெப்பநிலை அதிகரிக்க, இவ்வெண்ணிக்கை மிகவும் அதிகரிக்கும். (2) ஆறில் ஒரு குழந்தை சூறாவளிக்கு இலக்காகும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது. (3) ஏழில் ஒரு குழந்தை ஆற்றுவெள்ளத்தால் பாதிக்கப்படுகிறார். (4) பத்தில் ஒன்று கடல்கோளினால் பாதிப்புக்கு உள்ளாகவுள்ளது. (5) உலகில் உள்ள குழந்தைகளில் 90 % மானோர் மாசடைந்த காற்றைச் சுவாசித்துள்ளனர்; இன்னமும் சுவாசிக்கின்றனர். இத்தரவுகள் அச்சமூட்டுகின்றன.

இப்போது சிந்தியுங்கள் நீங்கள் காலநிலைக் குற்றவாளியா? அடுத்தாண்டை நீங்கள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறீர்கள்.

சென்னை

எடப்பாடி கார்மீது காலணி வீசிய

அ.ம.மு.க நிர்வாகி கைது

ஜெயலலிதா நினைவிடத்தில் எடப்பாடி பழனிசாமி கார் மீது காலணி வீசிய அம்மா மக்கள் முன்னேற்றக் கழக (அ.ம.மு.க) நிர்வாகி மாரிமுத்துவை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஐந்தாம் ஆண்டு நினைவு தினம் அனுஸ்டிக்கப்பட்டபோது, நினைவிடத்திற்கு, அண்ணா திராவிட முன்னேற்ற கழக (அ.தி.மு.க) ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர்செல்வம் இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி மற்றும் ஆயிரத்துக்கு மேற்பட்ட அ.தி.மு.க தொண்டர்களும் அங்கு நேரில் சென்று மரியாதை செலுத்தினர்.

அப்போது, அ.ம.மு.கவினரும் ஜெயலலிதா நினைவிடத்தில் மரியாதை செலுத்தினர். மரியாதை செலுத்திவிட்டு திரும்பியபோது எடப்பாடி பழனிசாமி சென்ற கார் மீது செருப்பு வீசியதாக அ.ம.மு.கவினர் மீது பொலிஸில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

டிடிவி தினகரனின் தூண்டுதலின் பெயரில் அ.ம.மு.க.வினர் செருப்புகளை வீசியதாகவும்.

அவர்கள் தாக்குதல் நடத்துவதற்காக இரும்பு, தடி, கம்பு, கத்தி போன்ற ஆயுதங்களை எடுத்து வந்ததாகவும் பொலிஸில் புகார் அளிக்கப்பட்டது.

இந்நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கார் மீது காலணி வீசிய, சென்னை திருவல்லிக்கேணி அ.ம.மு.க நிர்வாகி மாரிமுத்துவை அண்ணா சதுக்கம் பொலிஸார் கைது செய்தனர்.

புதுடெல்லி

சுயசரிதை வெளியீட்டில்

தலைமை நீதிபதி மனம்திறந்த பேச்சு

உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய், தன்னுடைய சுயசரிதை நூல் வெளியீட்டு விழாவில் மனம் திறந்து பேசியுள்ளார்.

மத்திய அரசால் ராஜ்ய சபா உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள ரஞ்சன் கோகாய் தனது சுயசரிதை நூலான நீதிபதிக்கான நீதி: ஒரு சுயசரிதை (ஜஸ்டிஸ் ஃபோர் தி ஜட்ஜ்: ஆட்டோபயோகிரபி) வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டார்.

புதுடெல்லியில் உள்ள நேரு நினைவு அருங்காட்சியக நூலகத்தில் நடைபெற்ற வெளியீட்டு விழாவில், தான் சந்தித்த பலவிதமான பிரச்சினைகள் மற்றும் அவற்றை எல்லாம் எதிர்கொண்ட விதம் குறித்த பல தகவல்களை பகிர்ந்துள்ளார்.

முன்னதாக, உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியாக இருந்த ரஞ்சன் கோகாய் தலைமையின் கீழ், சர்ச்சைக்குரிய நீண்டகால வழக்கான அயோத்தி ராமர் கோவில் வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டு வழக்கு முடித்து வைக்கப்பட்டது. 2019ம் ஆண்டு நவம்பர் மாதம் 9ஆம் திகதி இந்த தீர்ப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தமிழகம்

அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம்:

அ.தி.மு.க முடிவில் மாற்றம்

அரசைக் கண்டித்து நாளை 11ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த போராட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக (அ.தி.மு.க) தலைமை அறிவித்துள்ளது.

அ.தி.மு.க சார்பில் மக்கள் பிரச்சினைகளில் கவனம் செலுத்தாத திராவிட முன்னேற்றக் கழக (தி.மு.க) அரசை கண்டித்து கழகத்தின் சார்பில் மாவட்ட தலைநகரங்களில் நாளை 11ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்திய முப்படைத் தலைமை தளபதி பிபின் ராவத் அவர்களுடைய மறைவையொட்டி ஆர்ப்பாட்டம் பிற்போடப்பட்டது. அதன்பிரகாரம், எதிர்வரும் 17ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) காலை 10 மணியளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று தெரித்துள்ளது.

தி.மு.க அரசை கண்டித்து இன்று (10) ஆர்ப்பாட்டம் நடத்தவிருந்தது. அவ்வார்ப்பாட்டமே, நாளைக்கு (11) ஒத்திவைக்கப்பட்டது.

தி.மு.க அரசு மக்கள் பிரச்சினைகளில் கவனம் செலுத்தவில்லை என்று

குற்றம் சாட்டியுள்ள அ.தி.மு.க, இதனை கண்டித்தே மாநிலம் தழுவிய இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தப்போவதாக அறிவித்தது.

பெட்ரோல், டீசல் மீதான மாநில அரசின் வரிகளை உடனடியாக குறைக்கவும், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு உதவிகள் வழங்கவும், பொங்கல் விழாவைக் கொண்டாட உதவும் வகையில் அனைவருக்கும் பொங்கல் பரிசுத் தொகை அளிக்கவும், அம்மா மினி கிளினிக்குகளை திமுக அரசு மூடுவதைக் கண்டித்தும், வெள்ளத்தால் பயிர்களை இழந்த விவசாயிகளுக்குப் போதுமான இழப்பீடு அளிக்கவும், தூய்மைப் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்க வலியுறுத்தியும், அரசின் அலட்சியத்தால் கடுமையாக உயர்ந்திருக்கும் அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசி உயர்வை எதிர்த்துமே ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவிருந்தது.

குன்னூர்

ஹெலி விபத்தையடுத்து

இரண்டு வாகனங்கள் அடுத்தடுத்து விபத்து

இராணுவ ஹெலிகொப்டர் விபத்தில் மரணித்தவர்களின் உடல்களை கொண்டுசென்ற அம்புலன்ஸ் பாதுகாப்பாக சென்ற பொலிஸ் வாகனமும் உடல்களை கொண்டுசென்ற அம்புலன்ஸும் அடுத்தடுத்து விபத்துக்குள்ளாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

நீலகிரி மாவட்டத்தில் இராணுவ ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளாகி, முப்படை தலைமை தளபதி பிபின் ராவத், அவரது மனைவி உள்பட 13 பேர் உயிரிழந்தனர்.

வெலிங்டனில், முப்படை தலைமை தளபதி பிபின் ராவத் உட்பட 13 பேரின் உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தப்பட்ட நிகழ்வு முடிந்து, 13 பேரின் உடல்களும் 13 அம்புலன்ஸ்களில் ஏற்றப்பட்டு சூலூர் விமானப்படை தளத்திற்கு சாலை மார்க்கமாக கொண்டு செல்லப்படுகையில், உடல்களை கொண்டு செல்லும் அம்புலன்ஸ்களுக்கு பாதுகாப்பாக சென்ற பொலிஸ் வாகனம் விபத்தில் சிக்கியது. அதற்குப் பின்னால் சென்றுகொண்டிருந்த அம்புலன்ஸும் விபத்தில் சிக்கியது.

உத்தரபிரதேசம்

பெண்களை கவரும் வகையில்

பிரியங்கா வாக்குறுதி

உத்தரபிரதேசத்தில் அடுத்த ஆண்டு (2022) சட்டசபை தேர்தல் நடைபெறவிருக்கிறது.

இதில் பெண்களை முக்கியமாக வைத்து இந்த தேர்தலை காங்கிரஸ் கட்சி சந்திக்க தயாராகி உள்ளது. அந்தவகையில், பெண்களை கவரும் வகையில் பல்வேறு வாக்குறுதிகளை கட்சியின் பொதுச்செயலாளரும், மாநில பொறுப்பாளருமான பிரியங்கா வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் உள்ள விவரங்களை அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அவர் கூறியதாவது:

இந்திய அரசியல் வரலாற்றிலேயே ஒரு கட்சி, பெண்களை மையப்படுத்தி தேர்தல் அறிக்கை வெளியிடுவது இதுவே முதல் முறையாகும். இன்றைய பெண்கள் தங்களுக்காக போராட விரும்புகிறார்கள். அந்த உணர்வை மனதில் வைத்தே இந்த அறிக்கை தயாரிக்கப்படடு உள்ளது.

பெண்களுக்கான தேர்தல் அறிக்கை சுய மரியாதை, தற்சார்பு, கல்வி, மரியாதை,

பாதுகாப்பு, சுகாதாரம் என 6 பகுதிகளாக பிரிக்கப்படுகிறது.

மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தால், அரசு பணிகளில் பெண்களுக்கு 40 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்படும். இதைப்போல போலீஸ் துறையில் 25 சதவீதம் வழங்கப்படும்.

தேர்தலில் போட்டியிட 50 சதவீத டிக்கெட் பெண்களுக்கு வழங்கப்படும். இதன் மூலம் அரசியலில் பாலின சமத்துவமின்மையை நீக்க உள்ளோம்.

50 சதவீதம் வரை பெண்களை வேலைக்கு அமர்த்தும் வணிக நிறுவனங்களுக்கு வரி விலக்கு மற்றும் உதவி வழங்கப்படும். பெண் தொழில்முனைவோருக்கு கடன், வரிச்சலுகை போன்றவை வழங்கப்படும்.

ஸ்ரீ லங்கா @ 100 புதிய விண்ணப்பச் சுற்று ஆரம்பிப்பு

சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்கா முகவர் அமைப்பினால் (USAID) ஆதரவளிக்கப்படும் தனியார் துறை தலைமையிலான வணிக மேம்பாட்டு தளமாகிய ஸ்ரீ லங்கா@100 ஆனது, வருமான வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கும், உள்ளக செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கும், புதிய சந்தைகளை அணுகுவதற்கும் வணிக ஆலோசனைச் சேவைகளை எதிர்பார்க்கும் நடுத்தர சந்தை நிறுவனங்களுக்கான தனது மூன்றாவது சுற்று விண்ணப்பங்களை அறிவித்தது.

50 மில்லியன் ரூபாய் மற்றும் அதற்கு மேற்பட்ட வருடாந்த வருமானத்துடன் இலங்கையில் ஒரு கம்பனிகளாகப் பதிவுசெய்யப்பட்டுள்ள அனைத்து நடுத்தர - சந்தை நிறுவனங்களும் தெரிவுக்கு தகுதியுடையவையாகும். பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்களின் விண்ணப்ப மதிப்பாய்வுகள், நேர்காணல்கள் மற்றும் வலியுறுத்தல் சந்திப்புகள் உள்ளிட்ட தெரிவுச் செயல்முறை 2022 பெப்ரவரி மாதம் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுவதுடன், 2022 மார்ச் மாதம் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்களுடன் இறுதி இணைந்து பணியாற்றுதலுடன் நிறைவடையும். விண்ணப்பிப்பதற்கு 2021 நவம்பர் 15 ஆம் திகதி முதல் 2022 சனவரி 15 ஆம் திகதி வரை srilanka100.lk இனை அணுகவும்.

ஸ்ரீ லங்கா@100 இன் இணை நிறுவுனர் மற்றும் ஸ்டெக்ஸ் முகாமைத்துவப் பணிப்பாளருமான, கலாநிதி குமுது குணசேகர, சமீபத்திய இணைந்து பணியாற்றல் சுழற்சியைப் பற்றி பேசுகையில், நாட்டின் பொருளாதாரப் பயணத்தில் இது ஒரு முக்கியமான நேரத்தில் வருகிறது என்று குறிப்பிட்டார். "இலங்கையின் பொருளாதாரம் மற்றும் வணிகங்கள், முன்னைய பல சவால்களில் இருந்து மீண்டதைப் போலவே, மிக மோசமான தொற்றுநோயிலிருந்து போற்றத்தக்க மீளெழுச்சியை வெளிப்படுத்தியுள்ளன. வரவிருக்கும் மாதங்கள் மீட்சிக்கு மட்டுமல்ல, வளர்ச்சியைத் தூண்டுவதற்கு தைரியமான நடவடிக்கைகளை எடுப்பதற்கான நேரமாக இருக்கும். இதனால்தான் ஸ்ரீ லங்கா @100 தற்போதைய சவால்களை எதிர்கொள்ளவும், வளர்ச்சி உத்திகளை நடைமுறைப்படுத்தவும் நடுத்தர - சந்தை நிறுவனங்களுக்கு உதவுவதில் கவனம் செலுத்துகிறது. நாங்கள் தொழில்துறை முற்போக்குவாதிகளாகவிருப்பதுடன் இன்றுவரை நாங்கள் 13 நிறுவனங்களை இணைத்துள்ளோம். எங்கள் ஆய்வில், எங்கள் தளத்தில் சேர விண்ணப்பிக்கும் நிறுவனங்களின் சிரேஷ்ட தலைமைத்துவத்தின் இலட்சியம் மற்றும் அளக்கக்கூடிய சாத்தியக்கூறுகளை நாங்கள் முக்கியமாக மதிப்பீடு செய்கிறோம்" என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

"குறிப்பாக கொவிட்-19 கட்டுப்பாடுகளுடன், தளர்ந்து போன பொருளாதார வளர்ச்சியும் மீண்டும் ஆரம்பிப்பது உலகளவில் வணிகங்களுக்கு ஒரு அடிப்படை சவாலாக உள்ளது" என்று USAID மிஷன் பணிப்பாளராகிய ரீட் ஏஷ்லிமன் கூறினார். "ஸ்ரீலங்கா@100 போன்ற முன்னெடுப்புகள் மூலம், நடுத்தர சந்தை நிறுவனங்கள் வலுவாகவும் மீளெழுச்சியுடனும் இருக்க USAID உதவுகிறது, எனவே அவர்கள் இலாபம் மற்றும் வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்குத் தற்போதைய சவால்களை திறம்பட வழிநடத்த முடியும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொழில்நுட்பம் முதல் விவசாயம் வரையிலான துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 13 உள்ளூர் நடுத்தர சந்தை நிறுவனங்கள் கடந்த வருடத்தில் ஸ்ரீலங்கா@100 இணைந்து பணியாற்றுவதற்கு உள்வாங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிறுவனமும் கணக்கியல், நிதி, சந்தைப்படுத்தல், சட்டம், தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம் உள்ளிட்ட துறைகளில் அதிக திறன் கொண்ட ஆலோசனை சேவைகளைப் பெறுகின்றன.

ஸ்ரீலங்கா @100 என்பது USAID இன் ஆதரவுடன் 2020 இல் ஆரம்பிக்கப்பட்ட ஒரு தனியார் துறை தலைமையிலான வணிக மேம்பாட்டு தளமாகும். இலங்கை சுதந்திரமடைந்த 100 வருடங்களுக்குள் உயர் வருமானம் கொண்ட நாடாக மாறுவதற்கு உதவுவதற்காக, உள்நாட்டுச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கும், தயாரிப்பு இலாகாக்களை மேம்படுத்துவதற்கும், புதிய சந்தைகளை அணுகுவதற்கும் மற்றும் மூலதனத்தை ஈர்ப்பதற்கும் இந்த முன்னெடுப்பானது உயர் சாத்தியமுள்ள நடுத்தர - சந்தை நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகிறது.

GLX Digital Evolver வியாபார வளர்ச்சியில்

அதிகரிப்பு பதிவு

'GLX Digital Evolver' நிகழ்ச்சி வெற்றிகரமாக நிறைவு பெற்றுள்ளதாக Good Life X (GLX) அறிவித்துள்ளது. 2021 மே மாதம் ஆரம்பிக்கப்பட்டு 12 வாரங்களுக்கு அதிகமாக இந்த நிகழ்ச்சி இடம்பெற்றது. இலங்கையைச் சேர்ந்த பிரயாணம் மற்றும் சுற்றுலாத் துறைகளைச் சேர்ந்த வியாபாரங்களுக்கு டிஜிட்டல் ரீதியில் வலுவூட்டும் வகையில் இந்த நிகழ்ச்சி வடிவமைக்கப்பட்டிருந்தது.

பொருளாதார கூட்டுறவு மற்றும் அபிவிருத்திக்கான ஜேர்மனி அமைச்சின் நிதியுதவியில், இலங்கை Deutsche Gesellschaft for Internationale Zusammenarbeit (GIZ) இனால் மெய்நிகர் நிகழ்வாக ஒன்லைனில் மூன்று மாத காலம் முன்னெடுக்கப்பட்ட இந்தத் திட்டம், பத்து பங்குபற்றுநர்களையும், பத்து டிஜிட்டல் மற்றும் சுற்றுலா நிபுணர்களையும் ஈடுபடுத்தி இடம்பெற்றது. இறுதி நிகழ்வின் சிறப்பு பேச்சாளராக, RETRACE Hospitality இன் ஸ்தாபகர் சலன பெரேரா பங்கேற்றார். பங்குபற்றுநர்களுடன் தமது நேர்த்தியான தாக்க ஆலோசனை மற்றும் மீண்டெழும் ஹோட்டல் அபிவிருத்தி தொடர்பான தமது நிபுணத்துவ அறிவை பங்குபற்றுநர்களுடனும், பார்வையாளர்களுடனும் பகிர்ந்து கொண்டார். தொழிற்துறை தொடர்பான முக்கியத்துவம் வாய்ந்த உள்ளம்சங்களுடன், பெருவாரியான நிபுணர்கள் மற்றும் பங்குபற்றுநர்கள் பற்றிய பிரதான உள்ளம்சங்கள் மற்றும் கருத்துரைகளை இந்த நிகழ்வு கொண்டிருந்தது.

Good Life X இன் ஸ்தாபகரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரந்துலா டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், "நிலைபேறாண்மையை நோக்காகக் கொண்ட இலங்கையின் பிரயாணம் மற்றும் சுற்றுலாத் துறையைச் சேர்ந்த தொழில் முயற்சியாளர்களுக்கு ஆதரவு வழங்கும் வகையில் இந்த நிகழ்ச்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டிருந்தது. தமது வியாபாரங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கு உதவுவது மாத்திரமன்றி, எதிர்காலத்துக்கு வருமானமீட்டுவதற்கு உதவும் வகையிலும், டிஜிட்டல் அறிவையும், வசதிகளையும் கொண்டிருப்பதற்கு உதவும் வகையிலும் அமைந்துள்ளது. தொற்றுப் பரவலின் பின்னரான எதிர்கால பிரயாணிகள், தமது பாவனையாளர் செயற்பாடுகளை டிஜிட்டல் முறையில் மேற்கொள்வதில் அதிகளவு ஈடுபாட்டை கொண்டிருப்பார்கள். நாடு மீளத் திறக்கப்பட்டதும் முன்னேறிச் செல்வதற்கு, இந்தத் துறைக்கு தொழில்நுட்பம் என்பது முக்கியமானதாக அமைந்துள்ளது. இந்த நிகழ்ச்சியின் பெறுபேறு என்பது நிலைபேறான வியாபார இலக்குகள், டிஜிட்டல் சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்கள் மற்றும் சாதனங்கள், கட்டமைப்பு செம்மையாக்கம் மற்றும் நாளிகை முகாமைத்துவ தந்திரோபாயங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வியாபாரங்கள் தொடர்ந்து இயங்குவது மாத்திரமன்றி, எதிர்வரும் மாதங்கள் மற்றும் வருடங்களில் எமது தேசம் கொவிட்-19 தொற்றுப் பரவலிலிருந்து மீண்டு, அதன் காரணமாக நாம் முகங்கொடுத்துள்ள இந்த நெருக்கடியான நிலையிலிருந்து மீள்வதற்கு முடியும் என்பதையிட்டு நாம் திருப்தியடைகின்றோம்." என்றார்.

இந்த நிகழ்ச்சியின் பயனாக, ஒன்லைன் மென்பொருள் பதிவுக் கட்டமைப்பான TrekkSoft ஐ ஒன்றிணைக்கும் முதல் நிறுவனங்களில் ஒன்றாக Rediscover திகழ்வதை எம்மால் அவதானிக்க முடிந்தது. மேலும், Infinity Vacations போன்ற பங்குபற்றுநர்களால் - 'That's a Holiday' எனும் வர்த்தக நாமம் உருவாக்கப்பட்டிருந்தது. இதனூடாக மிலேனியல் மற்றும் Gen-Z பிரயாணிகளுக்கு சேவைகள் வழங்கப்படுவதுடன், 24/7 ஒன்லைன் பிரயாண கட்டமைப்பு சேவை நிறுவ பயன்படும். துரித மீள வர்த்தக நாம பதிவு திட்டத்தினூடாக Gileemale இனால் ஒன்லைனில் தனது பிரசன்னத்தை மேம்படுத்திக் கொள்ள முடிந்ததுடன், தற்கால பிரயாணிகளின் தேவைகளுக்கேற்ப தம்மை மாற்றியமைத்துக் கொள்ள உதவியாக அமைந்துள்ளது.

GLX Digital Evolver நிகழ்ச்சி என்பதில் பத்து இறுதி வர்த்தக நாமங்களான - Gileemalee Retreat, Summer Explorers Pvt Ltd, Eco Grip, The Travel Concierge, Rediscover Sri Lanka, Detroves Travel, Nandana Tea factory, Eco Team - Sri Lanka Pvt Ltd, Infinity Vacations and Jungle Beach Camp - Ahungalla போன்றன பங்கேற்றிருந்தன. இந்த வர்த்தக நாமங்களுக்கு வளர்ந்து வரும் சர்வதேச பிரயாண சந்தைகளுக்கமைய, டிஜிட்டல் பகுதிகளை பயன்படுத்தி தமது செயற்பாடுகள், நிலைபேறான நடவடிக்கைகள், வியாபார வினைத்திறன், செயற்பாடுகள் மற்றும் சேவைகள் போன்றவற்றை மேம்படுத்திக் கொள்வதற்கு பெறுமதி வாய்ந்த வாய்ப்பு கிடைத்திருந்தன.

சம்பியன்ஸ் லீக்:

வெளியேற்றப்பட்ட பார்சிலோனா

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரிலிருந்து ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா வெளியேற்றப்பட்டுள்ளது.

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச்சின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான குழு ஈ போட்டியில் 0-3 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தமையையடுத்தே தொடரிலிருந்து பார்சிலோனா வெளியேற்றப்பட்டுள்ளது.

மியூனிச் சார்பாக, தோமஸ் மல்லர், லெரோய் சனே, ஜமால் முஸியாலா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், சுவிற்ஸர்லாந்துக் கழகமான யங் போய்ஸுக்குமிடையிலான குழு எஃப் போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. யுனைட்டெட் சார்பாகப் பெறப்பட்ட கோலை மேஸன் கிறீன்வூட் பெற்றதோடு, போய்ஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை பேபியன் றீடர் பெற்றிருந்தார். இந்நிலையில், ரஷ்யக் கழகமான ஸெனிட்டுக்கும் நடப்புச் சம்பியன்களான செல்சிக்குமிடையிலான குழு எச் போட்டியானது 3-3 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. பிறீமியர் லீக் கழகமான செல்சி சார்பாக, திமோ வேர்னர் இரண்டு கோல்களையும், றொமேலு லுக்காக்கு ஒரு கோலையும் பெற்றனர். ஸெனிட் சார்பாக, கிளாடினியோ, சர்தார் அஸ்மௌன், மகொமெட் ஒஸ்டொயெவ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

நியூசிலாந்து

2027ஆம் ஆண்டு முதல்

சிகரெட்டுக்கு தடை

2027 ஆம் ஆண்டு முதல் சிகரெட் விற்பனைக்குத் தடை விதிக்கப்படுமென நியூசிலாந்து அரசு அறிவித்துள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது

50 லட்சம் மக்கள் தொகை கொண்ட நியூசிலாந்தில் பெரியவர்கள் மட்டுமின்றி ஆசிரியர்களும் மாணவர்களும் புகைப்பிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாகி வருவதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் இதனைத் தடுக்கும் வகையில் சிகரெட் விற்பனையைத் தடை செய்ய அந்நாட்டு சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது.

அந்தவகையில் வரும் 2027ஆம் ஆண்டு முதல் சிகரெட் விற்பனைக்கு தடை விதிக்கப்படும் என்றும் அவ்வாறு விற்பனை செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது

அரசின் இந்த அதிரடி உத்தரவு பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனி

ஜேர்மனியின் பிரதமரானார் ஒலாப் ஸ்கோல்ஸ்

ஜேர்மனியின் பிரதமராக 16 ஆண்டுகளாகப் பதவி வகித்த ஏஞ்சலா மெர்கல் நேற்று முன் தினம்(08) ஓய்வு பெற்றார்.

கடந்த 2005ம் ஆண்டு அவர் பொறுப்பேற்ற ஏஞ்சலா மெர்கல் உலகநாடுகள் மத்தியில் ஜேர்மனியின் செல்வாக்கு பன்மடங்கு உயர காரணமாக இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் ஜேர்மனியின் புதிய பிரதமரைத் தேர்வு செய்வதற்கான வாக்கெடுப்பு நேற்று அந்த நாட்டின் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அதில் ஏஞ்சலாவின் அரசியல் வாரிசும் முன்னாள் நிதி அமைச்சருமான ஒலாப் ஸ்கோல்ஸ் (Olaf Scholz) புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார்.

63 வயதாகும் ஒலாஃப் ஷோல்ஸ், ஹம்பர்க் நகர மாகாணத்தின் முதல் மேயர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எல்.பி.எல்:

வொரியர்ஸை வென்ற கிங்ஸ்

லங்கா பிறீமியர் லீக்கில் (எல்.பி.எல்), கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கண்டி வொரியர்ஸுடனான போட்டியில் ஜஃப்னா கிங்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற வொரியர்ஸின் அணித்தலைவர் அஞ்சலோ பெரேரா, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

இந்நிலையில், முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ், ஆரம்பத்தில் விக்கெட்டுகளை இழந்தபோதும், அவிஷ்க 53 (23), திஸர பெரேராவின் 53 (21), சத்துரங்க 21 (10), ஷொய்ப் மலிக்கின் ஆட்டமிழக்காத 16 (10), கட்மோரின் 14 (11) ஓட்டங்களோடு, மழை காரணமாக 14 ஓவர்களாகக் குறைக்கப்பட்ட போட்டியில் 6 விக்கெட்டுகளை இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஷிராஸ் அஹ்மட் 3-0-22-3 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

பதிலுக்கு, துடுப்பெடுத்தாடிய வொரியர்ஸ் சார்பாக, பவல் 61 (19), சரித் அஸலங்க 42 (19), கெனார் லூயிஸ் 41 (36) ஓட்டங்களைப் பெற்றபோதும், 14 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 166 ஓட்டங்களையே பெற்று 14 ஓட்டங்களால் டக் வேர்த் லூயிஸ் முறையில் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக லக்மால் தெரிவானார்.

தங்கம் வென்றார்

உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற பொதுநலவாய பளுதூக்குதல் சம்பியன்ஷிப் போட்டியில், (45 கிலோ கிராமுக்கு கீழ்– பெண்கள்) ரூமாலி சமரகோன் தங்கப் பதக்கத்தை வென்றார்.

கோலியை பிரதியிட்ட றோஹித்

இந்தியாவின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான அணித்தலைவராக றோஹித் ஷர்மா நியமிக்கப்பட்டுள்ளார். தவிர, டெஸ்ட் போட்டிகளுக்கான உப அணித்தலைவராகவும் ஷர்மா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் காயம் காரணமாக இரவீந்திர ஜடேஜா, அக்ஸர் பட்டேல், ஷுப்மன் கில் ஆகியோர் டெஸ்ட் குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: விராட் கோலி (அணித்தலைவர்), றோஹித் ஷர்மா (உப அணித்தலைவர்), லோகேஷ் ராகுல், மாயங்க் அகர்வால், செட்டேஸ்வர் புஜாரா, அஜின்கியா ரஹானே, ஷ்ரேயாஸ் ஐயர், ஹனும விஹாரி, றிஷப் பண்ட் (விக்கெட் காப்பாளர்), ரித்திமான் சஹா (விக்கெட் காப்பாளர்), இரவிச்சந்திரன் அஷ்வின், ஜெயந்த் யாதவ், இஷாந்த் ஷர்மா, மொஹமட் ஷமி, உமேஷ் யாதவ், ஜஸ்பிரிட் பும்ரா, ஷர்துல் தாக்கூர், மொஹமட் சிராஜ்.

சகலதுறை வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில்

இரண்டாமிடத்துக்கு முன்னேறினார் அஷ்வின்

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் இரண்டாமிடத்துக்கு இரவிச்சந்திரன் அஷ்வின் முன்னேறியுள்ளார்.

நியூசிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் எட்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றியமையைத் தொடர்ந்தே மூன்றாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி இரண்டாமிடத்தை அஷ்வின் அடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜேஸன் ஹோல்டர், 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. பென் ஸ்டோக்ஸ், 4. இரவீந்திர ஜடேஜா, 5. ஷகிப் அல் ஹஸன்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜோ றூட், 2. ஸ்டீவ் ஸ்மித், 3. கேன் வில்லியம்ஸன், 4. மர்னுஸ் லபுஷைன், 5. றோஹித் ஷர்மா, 6. விராட் கோலி, 7. திமுத் கருணாரத்ன, 8. பாபர் அஸாம், 9. டேவிட் வோணர், 10. குயின்டன் டி கொக்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

பற் கமின்ஸ், 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. ஜொஷ் ஹேசில்வூட், 4. டிம் சௌதி, 5. ஷகீன் ஷா அஃப்ரிடி, 6. ககிஸோ றபாடா, 7. நீல் வக்னர், 8. ஜேம்ஸ் அன்டர்சன், 9. கைல் ஜேமிஸன், 10. ஜஸ்பிரிட் பும்ரா.

ரஷ்யா

முகக் கவசத்தால் துப்பாக்கிச் சூடு:

இருவர் உயிரிழப்பு

பாதுகாவலர் முகக்கவசம் அணியுமாறு கூறியதால் ஆத்திரமடைந்த நபர் ஒருவர் துப்பாக்கிச்சூடு நடத்திய சம்பவம் ரஷ்யாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 07 ஆம் திகதி மொஸ்கோவில் உள்ள அரசு பொது சேவை மையத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவ தினத்தன்று குறித்த நபரிடம் அங்கிருந்த பாதுகாவலர் ஒருவர் முகக் கவசம் அணிந்து கொண்டு உள்ளே வருமாறு கூறியதாகவும் இதனால் ஆத்திரமடைந்த அந்நபர் அங்கிருந்தவர்களை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இச்சம்பவத்தில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் எனவும், நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் துப்பாக்கிச் சூடு நடத்திய குறித்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் இது குறித்து மேலதிக விசாரணைகளை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான்

பெண்களை நிர்வாணமாக்கி

அழைத்து சென்ற கும்பல்

கடையொன்றில் திருடியதாகக் கூறி, கும்பலொன்று நான்கு பெண்களின் ஆடைகளைக் களைந்து அவர்களைக் கொடூரமாகத் தாக்கி, வீதியில் அழைத்துச் சென்ற சம்பவம் பாகிஸ்தானின் பெரும் பரபரப்பை ஏற்படுதியுள்ளது.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணம் ஃபைசலாபாத் நகரில் உள்ள சந்தையொன்றில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

சம்பவ தினத்தன்று அப்பகுதிக்கு பதின்பருவத்தைச் சேர்ந்த யுவதி உட்பட நான்கு பெண்கள் குப்பைகளைச் சேகரிக்கச் சென்றதாகவும், இதன் போது அருகில் இருந்த கடையொன்றில் அருந்த நீர் கேட்டதாகவும், எனினும் அப்பெண்களை அக்கடையின் உரிமையாளர் திருட வந்தவர்கள் என நினைத்து சிலருடன் சேர்ந்து தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக அப்பெண்களை ஆடைகளை அவிழ்த்து நிர்வாணமாக்கி, குச்சிகளால் அடித்து வீதியில் சுமார் ஒரு மணிநேரம் ஊர்வலமாக அழைத்துச் சென்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இது குறித்து பாதிக்கப்பட்ட பெண்ணொருவர் கருத்துத் தெரிவிக்கையில் "இச்சம்பவத்தின் போது சுற்றி நின்று வேடிக்கை பார்த்த மக்களில் ஒருவர் கூட எங்களுக்கு உதவ முன்வரவில்லை"என்றார்.

இந்நிலையில், இவ்வீடியோவானது சமூக வலைத்தளங்களில் பரவி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில் பஞ்சாப் மாகாண பொலிஸார் இதில் தொடர்புடைய 5 குற்றவாளிகளை கைது செய்திருப்பதாக தெரிவித்துள்ளனர்.

ஜெனீவா

57 நாடுகளில் ஒமிக்ரோன்

அண்மையில் தென் ஆபிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட ஒமிக்ரோன் (Omicron) வகை கொரோனாத் தொற்றானது மிகவும் வேகமாகப் பரவி வருவதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் "ஒமிக்ரோன் இதுவரை 57 நாடுகளுக்குப் பரவியிருப்பதாகவும், மேலும் பல நாடுகளுக்கு பரவக் கூடிய ஆபத்து இருப்பதாகவும், இதனால் உலகநாடுகள் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையைத் துரிதப்படுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் டெல்டா தொற்றின் பாதிப்பை விடவும் குறைந்த அளவிலான பாதிப்பே ஒமிக்ரோனினால் ஏற்பட்டிருப்பதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

அல்சைமர் நோயைத் தடுக்கும் வயாகரா

ஆய்வில் தகவல்

ஆண்மை குறைவு பிரச்சினைக்கு மருந்தாக எடுத்துக் கொள்ளப்படும் வயாகராவில் பயன்படுத்தப்படும் சில்டெனாஃபில் (Sildenafil) என்ற மருந்து அல்சைமர் (Alzheimer) நோயின் அபாயத்தை 69 சதவீதம் குறைப்பதாக ஆய்வு ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

கிளீவ்லேண்ட் கிளினிக்கின் ஒரு குழு, சுமார் 70 லட்சத்திற்கும் அதிகமான நோயாளிகளின் தரவுகளை ஆய்வு செய்தது.

இதன் போது குறித்த மருந்தை எடுத்துக் கொள்பவர்களின் மனித திசுக்களில் மேற்கொண்ட பரிசோதனைகளில், இதனை உட்கொள்பவர்களின் மூளையில் செல் வளர்ச்சி அதிகரித்துள்ளமை கண்டறியப்பட்டது.

அத்துடன் சில்டெனாபில் அல்லாத மருந்துகளை உட்கொள்பவர்களை விட சில்டெனாபில் மருந்து பயன்படுத்துபவர்களுக்கு அல்சைமர் நோய் வருவதற்கான வாய்ப்பு 69 சதவீதம் குறைவாக இருப்பதாகவும் ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தகக்து.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 10 டிசெம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.